பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 08 திங்கட்கிழமை 22.01.2024 கதிர் 76

# தமிழ் அரசுக் கட்சிக்கு புதிய தலைவர் தெரிவு

## போட்டியில் சிறீதரன் எம்.பி. வெற்றி



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் 47 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு வெற்றி பெற்றார். சிவஞானம் சிறீதரனுக்கு ☞ 2

## வேலையின்மை அதிகரிப்பு

பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த ஆண்டு (2023) இரண்டாம் காலாண்டில் நாட்டில் வேலையின்மை 5.2 வீதமாக அதிகரித் துள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் காலாண்டில், இலங்கையில் வேலை யின்மை விகிதம் 4.7 வீதமாக இருந்தது, இரண்டாவது காலாண் டில், அது 5.2 வீதமாக அதிகரித்துள்ளது.

அனைத்து வயதினரையும் விட இளம் வயதினரின் (15--24 வயது) வேலையின்மை விகிதம் 25.8 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2023ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 48.6 வீதமாகக் குறைந்துள்ளது என்று நிதி அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சித் தலைவருக்கான தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. நடந்து முடிந்தது என்பதைவிட அது சுபமான முறையில் பதற்றங்கள் இல்லாத தீர்வுகளுடன் முடிந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இந்தத் தேர்தல் கட்சியைப் பிளவுபடுத்திவிடும், தமிழ்த் தேசியத்தைக் காவு வாங்கிவிடும், தமிழர்களின் அரசியலையே கவிழ்த்துவிடும் என்றெல்லாம் பதற்றப்பட்டவர்களை அமைதிப்படுத்தும் வகையில் முடிவு வந்திருக்கின்றது.

தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலைத் தள்ளி வைப்பதற்கும் போட்டியே இன்றித் தெரிவை நிகழ்த்துவதற்கும் கடைசித் தருணம் வரை முயற்சிகள் ☞ 2

## யானை தாக்கி ஒருவர் இறப்பு

செம்பிமொட்டை காட்டுப் பகுதியில் யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா- வான் எல பொலிஸ் பிரிவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காட்டுப் பகுதியில் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது யானை தாக்கியதில் எம்.எஸ். முகமட் யா கூப் யானையால் தாக்குண்டு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் கிண்ணியா, ஆயிலியடி பகுதியைச் சேர்ந்தவர். ☞ 2

# தமிழ் தேசியத்தின் இருப்புக்காக கடமையோடு கட்சி பணியாற்றும்

## புதிய தலைவரானதும் சிறீதரன் உறுதிமொழி

எமது மக்களின் உரிமைக்காக தேசிய இருப்புக்காகவும், தமிழ்த் தேசியத்தினுடைய ஒவ்வொரு அங்குல இருப்புக்காகவும் பொறுப் போடும் கடமையோடும் கட்சியின் பணிகள் முன்னெடுக்கப்படும். நாம் ஏற்கனவே எமது பலத்தையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தி யிருந் தோம். அதேநேரம், சுமந்திரன், யோகேஸ்வரனுடன் ஒன்றிணைந்த பயணம் தொடரும் என்று இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவரும், அக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப் பட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கும்போதே சிவஞானம் சிறீதரன் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராக நான் தெரிவாகுவதற்குக் காரணமாக இருந்த இறைவ ☞ 2

# நாம் ஒற்றுமையாகவே பயணிப்போம் சுமந்திரன் திருமலையில் வாக்குறுதி



தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிறீதரனுடன் இணைந்து ஒற்றுமையாகப் பயணிப்போம் என தலைமைக்கான மற்றொரு வேட்பாளரான யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. ☞ 2

# புதிய இந்தியத் தூதுவர் ஜாவை சந்தித்து வடக்கு ஆளுநர் பேச்சு



இலங்கைக்கான இந்தியத் தூதுவராகப் புதிதாகப் பதவியேற்றவரான சந்தோஸ் ஜா, வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை நேற்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சனிக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது ஆளுநரால் இந்தியத் தூதுவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என்று தெரிவித்த துதுவர், விசேடமாக வட மாகாணத்துக்கான ஒத்துழைப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

# மாவீரர் துயிலும் இல்லத்தில் வணக்கம் செலுத்திய சிறீதரன்



இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் நேற்று ☞ 2

# அதிக ஹெரோயின் உள்ளெடுத்த சாவகச்சேரி இளைஞன் இறப்பு

ஹெரோயின் போதைப் பொருளை அதிகளவில் பயன்படுத்திய இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று இரவு சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

அந்த இளைஞர் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் போதைப்பொருள் வழக்கு ஒன்றுடன் தொடர்புடையவர் என்ற ரீதியில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டு, கடந்த வெள்ளிக் கிழமை (19) விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அதன்பின்னர், அவர் நீர்வேலியில் உள்ள உறவினரது வீட்டில் 19ஆம் திகதி தங்கிவிட்டு, நேற்று ஊருக்கு திரும் பியுள்ளார்.

நேற்றிரவு அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாக அவரது சகோதரனுக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது. உடனடியாகச் சென்ற சகோதரன் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளார். ☞ 8

# நாணய நிதியத்திற்கு கசப்பான விடயங்களை உணர்த்தினோம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்திற்குச் சில கசப்பான விடயங்களை உணர்த்தினோம். நாம் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தாத ஆட்சியையே வழங்குவோம், அதற்குத் தேவையானதைச் செய்வோம் என்பதை அவர்களுக்கு வெளிப்படுத் தினோம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரித்தார்.

பொல்ஹாவெலவில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்தனர். எமது நிலைமைகளை வெளிப்படுத்தியுள்ளேன். குறிப்பாக நாம் மக்களுக்கு சுமையை ஏற்படுத்தாத ஆட்சியை முன்னெடுப்பதற்கே முயற்சிப்போம் என்பதைக் கூறியுள்ளேனன்.

சர்வதேச ☞ 8

### 1.3 பில்லியன் மக்கள் வாழும்

# ஆபிரிக்காவுடன் உறவை பலப்படுத்த ரணிலினது கம்பாலா பயணம் உதவி

## அயலுறவுத்துறை அமைச்சரின் கூற்று இது

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உகண்டாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தினால் எதிர்காலத்தில் உலகில் துரிதமாக அபிவிருத்தியை எட்டுமென கருதப்படும் 1.3 பில்லியன் மக்கள் வசிக்கும் ஆபிரிக்க நாடுகளுடனான உறவுகளை பலப்படுத்திக் கொள்ள முடிந் ☞ 8

# புதிய உலக பொருளாதாரத்திற்கு ஏற்ற தொழிற்படை தயாராகட்டும்

## ரணில் கம்பாலாவில் அழைப்பு

புதிய உலக பொருளாதாரத்திற்காக பயிற்றுவிக்கப்பட்ட தொழில் படையைத் தயார்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

உகண்டா தலைநகர் கம்பாலாவில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

டுபாய் கோப் 28 (COP- 28) ☞ 2

## இனி இது .....

தொடரும் என்ற ஒரு பதற்றமான சூழலில்தான், நேற்றுக் காலை 10 மணிக்கு திருகோணமலை நகர சபை கேட்போர் கூடத்தில் கூட்டம் தொடங்கியது. எனினும் வாக்களிப்புத் தொடங்குவதற்கு காலதாமதமாகியது. காரணம், யாழ்ப்பாணத்தில் இருந்து இரு தொகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் உரிய நேரத்திற்கு வருகை தந்திருக்கவில்லை. அத்தோடு வாக்களிப்புக்கு ஏற்கனவே பெயர் குறிப்பிடப்பட்டு கட்சியால் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் தவிர மேலும் 9 பேரைத் தலைவருக்கான பரிந்துரையின் கீழ் அந்தப் பட்டியலில் உட்புகுத்த மாவையர் இறுதி நேரத்தில் முயன்றதாலும் சில குழப்பங்கள் ஏற்பட்டதாகத் தெரிகின்றது.

வாக்களிப்பை அதற்கென நியமிக்கப்பட்ட 8 பேர் கொண்ட குழு முன்னின்று நடத்தியது. முதலாவதாக கட்சியின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் அழைக்கப்பட்டார். அவர் கூட்டத்திற்கு வந்திருக்கவில்லை. அவரைத் தொடர்ந்து பதவி விலகிச் செல்லும் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா அழைக்கப்பட்டார். அவர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. தான் நடுநிலமை என்று அறிவித்தார்.

இதனையடுத்துஏனையமத்திய குழு உறுப்பினர்களில் முதலில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பின்னர் ஏனைய உறுப்பினர்களும் பெயர் குறிப்பிட்டு அழைக்கப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். அதனையடுத்து மேலதிகமாக நியமனம் பெற்ற 9 பேருக்கு வாக்களிப்பதற்குவாய்ப்புஅளிக்கப்பட்டது.

தொடர்ந்து கட்சியின் மாவட்ட சபைப் பிரதிநிதிகள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். முதலில் மன்னார் மாவட்டமும், பின்னர் யாழ்ப்பாண மாவட்டமும் வாக்களித்தன. தொடர்ந்து ஏனைய மாவட்டப் பிரதிநிதிகள் வாக்களித்தனர்.

அதடினப்படையில் குறித்த வாக்கெடுப்பில் 321 பேர் பங்கேற்றிருந்தனர். அவர்களால் அளிக்கப்பட்ட வாக்குகள் மூன்று பெட்டிகளில் சேகரிக்கப்பட்டு உடனடியாகவே எண்ணப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டன.

அதற்கமைய, எம்.ஏ.சுமந்திரன் 137 வாக்குகளையும், சிவஞானம் சிறீதரன் 184 வாக்குகளையும் பெற்றனர். சீனித்தம்பி யோகேஸ்வரனுக்கு ஒரு வாக்குக்கூட விழவில்லை.

மட்டக்களப்புமாவட்டத்திலிருந்து 50 பேர் சென்றிருந்த நிலையில் வாக்களிப்பதற்கான பெயர் பட்டியலில் மாவட்டத்தின் மகளீர் அணி செயலாளர் உட்பட 13 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன என்று குழப்பம் ஏற்பட்டது.

இது தொடர்பாக மாவட்ட தலைவரான சாணக்கினுக்கு தாம் முறையிட்டும் அவர் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர்களில் ஏழு பேர் வாக்களிப்புக்கு முன்னதாக மாவை சேனாதிராஜாவிடம் முறையிட்டனர்.

இதைத் தொடர்ந்து அவர்கள் 7 பேரையும் வாக்களிக்க அனுமதிப்பது தொடர்பில் மூன்று வேட்பாளர்களையும் மாவை சேனாதிராஜா அழைத்துப் பேசினார். அவர்கள் வாக்களிப்பதற்கு மாவட்டக் கிளைத் தலைவரான சாணக்கியனின் அனுமதி அவசியம் என்று குறிப்பிட்ட வேட்பாளரான சுமந்திரன் திட்டவட்டமாகத் தெரிவித்த நிலையில் சாணக்கியன் அழைக்கப்பட்டு அனுமதி கேட்கப்பட்டது. ஆனால் அவர் அந்த உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டார்.

இதேபோன்று, திருக்கோவிலைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களுக்கும் பட்டியலில் பெயர் இல்லாததன் காரணமாக வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதே நேரம், கொழுப்புக் கிளையில் உறுப்புரிமை இல்லாதவர் என்று கூறப்பட்ட சிங்காரவேல் மலர்விழி என்பவரின் பெயர் பட்டியில் இடப்பட்டு அவர் வாக்களிக்க அனுமதி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

யாழ் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சசிகலாவின் பெயரும் பட்டியலில் நீக்கப்பட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதேபோன்று மேலும் சில மாவட்டங்களிலும் அங்கத்தவர்களின் பெயர் பட்டியல் தொடர்பில் குழப்பநிலைமைகளும் காணப்பட்டன.

தமிழ்அரசுக்கட்சித்தலைவரைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் முஸ்லிம் பிரதிநிதிகளும் வாக்களித்திருந்தனர் என்பது சிறப்பம்சம். மன்னார், கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கட்சியைப் பிரதிநித்துவம்செய்யும்நீண்டகால உறுப்பினர்களான முஸ்லிம் பிரதிநிதிகள் வாக்களித்தனர்.

வாக்கெடுப்பின் இறுதியில் சிறீதரன் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கப்பட்டதும் மண்டபத்தின் வெளியே கூடியிருந்த அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பரித்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். "தேசியம் வென்றுவிட்டது" என்று கூச்சலிட்டனர்.

புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் தனது முதல் பயணமாக வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கோணஸ்வரர் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டார். அதனை அடுத்து திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்கும் சென்று வழிபாடுகளில் கலந்து கொண்டார். பத்திரகாளி அம்மன் ஆலய பிரதம சிவாச்சாரியார் அவருக்குப் பொன்னாடை போர்த்தி ஆசீர்வாதம் வழங்கினார்.

தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிறீதரன் ஜனவரி 27, 28 திருகோணமலையில் இடம்பெறும் கட்சியின் 17ஆவது வருடாந்த தேசிய மாநாட்டில் தனது பொறுப்புக்களை மாவை சேனாதிராசாவிடம் இருந்து ஏற்றுக்கொள்வார். அதன் பின்னர் அவர் கட்சியின் உத்தியோகபூர்வத் தலைவராகச் செயற்படுவார்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியம்தான் பெரும் பேசுபோருளாக்கப்பட்டிருந்தது. சிறீதரன் தேசியத்தின் காவலர் என்றும் சுமந்திரன் அதனைச் சமரசம் செய்து கொள்ளக்கூடியவர் என்றும் ஒரு தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டது. இறுதி நேரப் பரப்புரைகளில் இந்த விடயமே கனதியான தாக்கத்தை வாக்காளர்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. அந்த வகையில் இந்த வெற்றியின் மூலம் தன்னை தமிழ்த் தேசியத்தின் காவலராக நிலைநிறுத்திக் கொண்டுள்ள சிறீதரன் தன் கடமையை செவ்வனே நிறைவேற்றுவார் என்று அவரை வாழ்த்துவோம்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாக 184 வாக்குகள் அளிக்கப்பட்டன. அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுமந்திரன் 137 வாக்குகளைப் பெற்றார். மூன்றாவது வேட்பாளரான சீனித்தம்பி யோகேஸ்வரன் ஒரு வாக்கைக்கூடப் பெறவில்லை.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைமைக்கான தேர்தலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிட்டிருந்தனர்.

இடைநடுவில் சீனித்தம்பி யோகேஸ்வரன் தான் சிவஞானம் சிறீதரனையே ஆதரிக்கின்றேன் என்றும் தனது வாக்கையும் அவருக்கே அளிப்பேன் என்றும் தெரிவித்திருந்தார். இதனால் அவருக்குஎவ்விதமானவாக்குகளும் அளிக்கப்படவில்லை.

திருகோணமலைநகராட்சிமன்ற கேட்போர் கூடத்தில் கட்சியின் புதிய தலைமையைத் தெரிவு செய்வதற்கான பொதுக் குழுக் கூட்டம், பதவி விலகிய தலைவர் மாவை சோ.சேனாதிராசா முன்பாக முற்பகல்10மணிக்குத்தொடங்கியது. சுகவீனம் காரணமாக செயலாளர் மருத்துவர்சத்தியலிங்கம்கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

கட்சியின் தீர்மானத்துக்கு அமைவாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் தலா ஒவ்வொரு உறுப்பினர்கள்நியமிக்கப்பட்டிருந்த குழுவினர்தேர்தல்செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

வாக்களிக்கத்தகுதிபெற்றபெயர்ப் பட்டியலுக்கு அமைவாக ஒவ்வொரு பொதுச்சபை உறுப்பினர்களாக அழைக்கப்பட்டு வாக்குகளைப் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

ஷமத்தியகுழு உறுப்பினர்கள் 43 பேரும், மேலதிகமாக 9 பேரும், யாழ்ப்பாணம் - 75, கிளிநொச்சி - 20, முல்லைத்தீவு - 25, மன்னார் - 25, வவுனியா - 20, திருகோணமலை - 30, மட்டக்களப்பு - 50, அம்பாறை - 35 என்றவாறு தொகுதிவாரியாக 280 பேரும் உட்பட 332 பேர் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர்.

அவர்களில் 184 பேர் சிறீதரனுக்கு ஆதரவாகவும் 137 பேர் சுமந்திரனுக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். இறுதியில் இந்த உட்கட்சித் தேர்தலில் சிறீதரன் வெற்றிபெற்றார்.

## யானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடை செய்யப்பட்ட காட்டுப் பகுதிக்குள் சென்று மரம் வெட்டிக் கொண்டிருந்தபோதே சம்பவம் இடம்பெற்றுள்ளது. யானை தாக்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த யாகூப்பின் மகன் அவரை அந்த இடத்திலிருந்து காப்பாற்றி வைத்தியசாலைக்கு எடுத்து வருவதற்கு இடையில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## நாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமந்திரன் தேர்தல் முடிவுகளின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் உறுதி யளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது தமிழ் அரசுக் கட்சி உட்கட்சிஜனநாயகத்தைநாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் முன்மாதிரியாக வெளிப்படுத்தி இருக்கின்றது. இதிலே வெற்றி பெற்ற சக வேட்பாளரும் எனது நண்பனுமான சிறீதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எங்களது முன்னாள் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா இத்தனை காலமும் வழிநடத்திய தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பு தற்போது நண்பன் சிறீதரன் மீது சுமத்தப்பட்டுள்ளது. இது மிகவும் சந்தோசமான விடயம். இந்தப் பயணத்திலே நாங்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாகப் பயணிப்போம். நாங்கள் இருவரும் தேர்தல் காலத்திலேயே மக்களுக்குத் தெளிவாகக் கூறிவந்ததன் அடிப்படையிலே தொடர்ந்தும் ஒற்றுமையாகப் பயணிப்போம்.

எனது முழுமையான ஆதரவை தற்போது ஜனநாயக முறையிலே தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற தலைவருக்கு வழங்குவேன் என்பதையும் இந்த வேளையிலே அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

## தமிழ் தேசியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னுக்கும் கட்சி ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். ஜனநாயகரீதியானகலந்துரையாடல் மற்றும் செயற்பாடுகள் ஊடாக வரலாற்றுரீதியானஅத்தியாயத்தைப் படைத்திருக்கின்றோம்.

இது பலபேருக்கு பலவித நம்பிக்கைகளை விதைத்துள்ளது, கட்சி குறித்துஇளைஞர்கள்மத்தியில்அதீத அக்கறையை ஏற்படுத்தியுள்ளது. என்னுடன் கட்சியின் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட எனது நண்பர்களான சுமந்திரன் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோருடன் ஒன்றிணைந்து பயணிப்போம்.

எமது மக்களின் உரிமைக்காக தேசிய இருப்புக்காகவும், தமிழ்த் தேசியத்தினுடைய ஒவ்வொரு அங்குல இருப்புக்காகவும் பொறுப்போடும் கடமையோடும் கட்சியின் பணிகள் முன்னெடுக்கப்படும். நாம் ஏற்கனவே எமது பலத்தையும், ஒற்றுமையையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

எங்களுடைய பங்கு என்பது இனம்சார்ந்தது. தமிழ்த்தேசியத்தின் இருப்பு சார்ந்தது, எமது இருப்பின் அடிப்படை உரிமை சார்ந்தது. அந்த உரிமையைப் பலப்படுத்துவதற்காக நாங்கள் எங்களது கரங்களை ஒன்றாகப் பலப்படுத்துவோம்.

எமது பொதுச்சபை உறுப்பினர்களின் அயராத உழைப்பு, புலம்பெயர் நாடுகளிலும், உள்நாடுகளிலும்இருக்கின்றதமிழர்களுடைய மன எண்ணங்கள், தீர்மானங்கள் என்பன இன்று எனக்கு ஒரு சந்தர்ப்பதை வழங்கியுள்ளது.

அந்தச் சந்தர்ப்பத்தை நாம் அனைவரும் இணைந்து முன்னெடுத்துச்செல்வோம். இந்த வாய்ப்பினை வழங்கிவைத்த அனைவருக்கும் மீண்டும் மீண்டும் நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 5.30 மணிக்கு கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சென்று தனது வணக்கங்களை செலுத்தியிருந்தார்.

திருகோணமலையில் நடந்த வாக்கெடுப்பில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து உடனடியாகவே கிளிநொச்சி திரும்பிய அவர், நேரடியாகக் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்குச் சென்று விடுதலைப் புலிகள்இயக்கத்தின்மாவீரர்களுக்குத் தனதுவணக்கத்தைச்செலுத்தினார்.

தொடர்ந்துசித்திவிநாயகர்ஆலய முன்றலில் மாலை 6 மணிக்கு வழிபாடுகளில்ஈடுபட்டார். அவருக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கட்சி ஆதரவாளர்களால் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் காலநிலை வெப்ப வலய முன்மொழிவைச் சமர்பித்தோம். அரச நிதியளித்தல் செயற்பாடுகளின்குறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் எமது கடல் மற்றும் வன, வளங்கள் உள்ளிட்ட உலக அளவிலான பொது வளங்களை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் அந்த முன்மொழிவு சமர்பிக்கப்பட்டது.

இன்றளவில் உலக வர்த்தக ஒழுங்குபடுத்தலுக்குள்பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தப் பயன்படுத்தப்படும் வளங்களின் அளவு குறைவதுடன் சுற்றாடல் பாதிப்பை மட்டுப்படுத்துதல், பாதிப்புக்களை தவிர்த்தல் போன்ற பாதுகாப்பான எண்ணக்கருக்களுடன் கூடிய எழுச்சியைக் காண முடிகிறது.

உலகவர்த்தகக்கட்டமைப்புக்குள் ஒருதலைப்பட்சமான மாற்றங்கள் நிகழக்கூடாது. அவ்வாறான தீர்மானங்களை ஒன்று அல்லது இரண்டு தலைநகரங்களை மாத்திரம் மையப்படுத்தியதாக மேற்கொள்வதை விடுத்து பலதரப்பு கலந்துரையாடல் ஊடாகவே செய்ய வேண்டும்.

நாம் உலக பொருளாதாரம் மற்றும் முதலீடுகளின் இலகுத்தன்மை, உயர்ந்தபட்சசெயற்திறன் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும். ஜி-77 அமைப்பு இந்த செயற்பாடுகளை பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது மற்றுமொரு நெருக்கடியாக அமைந்திருக்கிறது. 'தொழில்நுட்ப மாற்றம், உற்பத்தி திறன் ஆகியன, மூலதனத்தை மிகவும் தீவிரமாக்கியுள்ளதுடன்குறைந்தபட்ச உழைப்பையை எதிர்பார்க்கிறது' என்றஜோசப்ஸ்டிக்லிடிஸின்கருத்து அதனை சரியாக விளக்குகிறது.

அதற்காக உலக நிதி கட்டமைப்பின் மறுசீரமைப்பை வலியுறுத்தும் அதேநேரம், ஜி-77 மற்றும் சீனா உள்ளிட்ட குழுக்கள் எமது அங்கத்துவ நாடுகளுக்கு, வலுசக்தி மற்றும் டிஜிட்டல் பரிமாற்றம், பசுமை பொருளாதாரம் மற்றும் புதிய உலக பொருளாதாரத்திற்காக பயிற்றுவிக்கப்பட்ட தொழில் படையைத் தயார்படுத்த வேண்டும்.

இலங்கை, ஜி-77 மற்றும் சீனா உள்ளிட்ட குழுக்கள் இணைந்து, நீதியானதும், சட்டத்திற்கு மதிப்பளிப்பதும், சமத்துவமானதுமான உலகிற்கான நோக்கை அடைந்துகொள்ளவும் பல தரப்பு கூட்டுத் தேவைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கும் புதிய தலைமைத்துவத்தை ஏற்றுகொண்டிருக்கும்யொவேரிமுசேவேனியின் தலைமைத்துவத்தின்மீதுநம்பிக்கை கொண்டுள்ளோம் - என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# சுதந்திரதின நிகழ்வு சிறப்பு விருந்தினராக தாய்லாந்துப் பிரதமர் ஸ்ரேத்தா தவிசின்!

## இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்தாகும்



இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வின் சிறப்பு விருந்தினராக தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் கலந்துகொள்ளவுள்ளார். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில், அம்மாதம் 3 ஆம் திகதி தாய்லாந்து பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுவிஸ் மற்றும் உகண்டா செல்வதற்கு முன்னர் சில முக்கிய சந்திப்புகளை நாட்டில் முன்னெடுத்திருந்தார். இதில் முக்கியமான ஒன்றாக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தின நிகழ்வு ஏற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போதே சுதந்திர தினத்தின் விசேட விருந்தினராக தாய்லாந்து பிரதமரை அழைத்துள்ளமை குறித்து தகவல் வெளியிட்டார்.

மேலும் இலங்கையின் வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் நினைவு பதிப்பொன்றை அச்சிட்டு வழங்கவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். இதேவேளை சுதந்திர தினத்தை 'புதிய நாட்டை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் அனுஷ்டிப்பதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் தலைமையிலான உயர்மட்டக்குழுவினரின் இலங்கை விஜயத்தின்போது இரு நாடுகளுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலின்போது உறுதிப்படுத்தினார்.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனான ஒப்பந்தங்களைத் தொடர்ந்து இது இலங்கையின் நான்காவது சுதந்திர வர்த்தக ஒப்பந்தமாகும். இதனூடாக தேயிலை, தேங்காய் பால் மற்றும் ஆடை உற்பத்தி போன்ற முக்கிய ஏற்றுமதிகளில், தாய்லாந்து சந்தையில் வரி இல்லாத அணுகலை இலங்கை பெறும்.

தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இதுவரையில் இருதரப்பினருக்கும் இடையில் எட்டு சுற்று பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு இறுதி இலக்கை அடைந்துள்ளன. மறுபுறம் இந்தியாவுடன் காலதாமதமான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கும், சீனாவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுகளுக்கு மத்தியில் தாய்லாந்துடனான ஒப்பந்தம் சிறப்பாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு தாய்லாந்து மிகவும் நெகிழ்வான மற்றும் புரிதலுடன் செயற்பட்டமை உள்ளிட்ட இரு நாடுகளுக்கு இடையிலான கலாசார இணைப்புகள் முக்கியத்துவம் பெற்றிருந்ததாகப் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும் ஒப்பந்தத்தின் பின்னர் பல ஏற்றுமதி பொருள்களுக்கான தாய்லாந்து சந்தையில் உடனடி வரியில்லா அணுகலை இலங்கை பெறுகிறது. உதாரணமாக, தாய்லாந்து, இலங்கை தேயிலைக்கான ஒதுக்கீட்டை பராமரிக்கும் போது (வரம்புக்கு அப்பால் எந்த இறக்குமதியும் அனுமதிக்கப்படாது), மேலும் அதன் மீது விதிக்கப்பட்டுள்ள 30 சதவீத வரியை நீக்குவதுடன், உலர் தேங்காய் மீதான 54 சதவீத வரியை தாய்லாந்து நீக்கும்.

வெவ்வேறு வகைகளில் வரும் தேங்காய்ப் பாலை இரு நாடுகளும் சுங்க வரியின்றி இறக்குமதி - ஏற்றுமதி செய்யும். இலங்கை வரியில்லா அனுமதி கோரிய 15 வகையான ஆடைகளுக்கான வரிகளைத் தாய்லாந்து தள்ளுபடி செய்யும். இதில் உள்ளாடைகள் மற்றும் பிற சிறப்புப் பொருள்களும் அடங்குகின்றன.

ஒப்பந்தம் ஊடாக தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகியவை 15 ஆண்டுகளில் அதிக கட்டண தாராளமயமாக்கல் திட்டத்துக்கு உறுதியளித்துள்ளன. தாய்லாந்தில் சுமார் 11,000 கட்டண வரிகள் உள்ளன. அதே வேளை இலங்கையில் சராசரியாக 8,500 கட்டண வரிகள் உள்ளன. இரு நாடுகளும் இவற்றில் 80 சதவீதத்தை தாராளமயமாக்குவதுடன் 5 சதவீதத்தை ஓரளவு தாராளமயமாக்கும். மீதமுள்ள வீதம் எதிர்மறையான பட்டியலில் இருக்கும்.

எதிர்மறை பட்டியல்களில் எந்த சலுகைகளும் (இறக்குமதி கட்டணங்களில் குறைப்பு) சேர்க்கப்படாத உருப்படிகள் உள்ளன. தற்போது, இலங்கையின் எதிர்மறையான பட்டியல்களில் விவசாயம் மற்றும் மீன்பிடி பொருள்கள் உள்ளிட்டவை அடங்குகின்றன.

தாய்லாந்துடனான பேச்சுகள் முதலில் 2015 - 2017 ஆண்டுகளில் தொடங்கப்பட்டன. அப்போது மூன்று சுற்று பேச்சுகள் நடைபெற்றன. ஆனால், சீனா மற்றும் இந்தியா உட்பட அனைத்து நாடுகளுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுகளையும் 2018 இற்குப் பிறகு இலங்கை நிறுத்திவைத்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே தாய்லாந்துடனான பேச்சுகள் 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

இதற்கிடையில், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவுடன் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-10 திகதிகளில் கலந்துரையாடல்களை இலங்கை முன்னெடுத்திருந்தது. இது இருதரப்புக்கும் இடையிலான 13 ஆவது சுற்று பேச்சுகளாகும். மறுபுறம் சீனாவுடனான உத்தேச சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்து அடுத்தகட்ட பேச்சுகள் எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(05)

# ஜனாதிபதியின் உகண்டா விஜயத்தால் ஆபிரிக்க நாடுகளின் உறவு பலமானது!

## அலி சப்ரி பெருமிதம்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தால் எதிர்காலத்தில் உலகில் துரிதமாக அபிவிருத்தியை எட்டுமெனக் கருதப்படும் 1.3 பில்லியன் மக்கள் வசிக்கும் ஆபிரிக்க நாடுகளுடனான உறவுகளைப் பலப்படுத்திக்கொள்ள முடிந்துள்ளது என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்த விடயம் இலங்கை வெளிவிவகாரக் கொள்கைகளின்போது இதுவரையில் கருத்தில் கொள்ளப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

'ஆபிரிக்காவைப் பார்ப்போம்' என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைவான இலங்கையின் புதிய பொருளாதார பயணத்திற்காக ஆபிரிக்க நாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பின்னணி உருவாகியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அணிசேரா நாடுகளின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு மற்றும் சீனா மற்றும் தென் துருவத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மாநாட்டில் பங்கேற்பதற்காக உகண்டாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் -

'அணிசேரா நாடுகளின் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உலகளாவிய பிரச்சினைகள், காசா பகுதியின் நிலைவரம், இஸ்ரேல் -பாலஸ்தீன நிலைவரம், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள், கடன் சுமையில் முடங்கிக் கிடக்கும் தரப்பினரை மீட்பதற்கான முன்னெடுப்புகள், காலநிலை அனர்த்தம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் உரையாற்றினார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்த உரையை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பாராட்டினர்.

அதற்கு இணையாக ஆபிரிக்க வலயத்தின் தென் துருவ நாடுகளின் தலைவர்களையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சந்தித்து கலந்துரையாடினார். மாநாட்டை நடத்திய உகண்டாவின் ஜனாதிபதி, எத்தியோப்பிய பிரதமர், பெனின் குடியரசின் உப ஜனாதிபதி, பஹாமாஸ் பிரதமர், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை ஜனாதிபதி ரணில் விக்ரசிங்க சந்தித்திருந்தார். மேலும் குறித்த நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திகொள்வது தொடர்பிலும் அவர் கலந்துரையாடினார்.

பெருமளவில் பேசப்படாத, 1.3 பில்லியன் மக்கள்தொகை கொண்ட, எதிர்காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியடையும் என்று உலகம் எதிர்பார்க்கும் ஆபிரிக்க நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்த இந்தப் பயணம் வித்திட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இலங்கை அடைந்து வரும் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதற்கு ஜனாதிபதியின் பங்களிப்பு ஆகியன இதன்போது அனைவராலும் பாராட்டப்பட்டது. ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், இந்த நாடு இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் இன்று இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அனைவரும் பாராட்டினர்.

குறிப்பாக, உகண்டாவின் ஜனாதிபதி யொவேரி முசெவேனி, வீழ்ச்சி அடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்ப அவர் ஆற்றிய பங்களிப்புக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

மேலும், இம்முறை அணிசேரா நாடுகளின் மாநாட்டின் ஊடாக, இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்த உண்மைகளை சர்வதேச சமூகத்திற்கு முன்வைக்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. அத்துடன், ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை வளர்த்துக்கொள்ள ஜனாதிபதியின் இந்த விஜயம் உதவியது என்றே கூற வேண்டும். அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் 'ஆபிரிக்காவைப் பார்ப்போம்' என்ற எண்ணக்கருவின் கீழ் இலங்கைக்கான புதிய பொருளாதாரப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு ஆபிரிக்க நாடுகளில் முதலீடு செய்வதற்கு இதன்போது அடித்தளமிடப்பட்டது.

அதற்கமையவே, இரு நாடுகளும் பயனடையும் என்ற நோக்குடன் பெனின் குடியரசுடன் இராஜதந்திர, உத்தியோகபூர்வ மற்றும் சேவை கடவுச்சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு விசா விலக்கு அளிக்க தீர்மானிக்கப்பட்டது. மேலும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் என்ற முறையில், பங்களாதேஷ், பஹ்ரைன், கானா, தன்சானியா, அஸர்பைஜான் போன்ற பல்வேறு நாடுக ளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுகளை நடத்தும் வாய்ப்பும் எனக்கு கிடைத்ததோடு, அந்த நாடுகளுடன் நட்புறவை மேலும் பலப்படுத்திக் கொள்ளவும், பொருளாதார உறவுகளை ஏற்படுத்தவும் வாய்ப்பு கிட்டியது.

எனவே, இவ்வாறான மாநாடுகளின் மூலம் சர்வதேச நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தி, நாட்டுக்கு நன்மைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்' என்றும் அமைச்சர் தெரிவித்தார். (05)

# மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்கின்றமை தொடர்பில் பொதுமக்கள் ஜன. 23 முதல் கருத்துகளை தெரிவிக்கலாம்!

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தகவல்

இலங்கை மின்சார சபை மின்சார கட்டணத்தை திருத்துவதற்கான முன்மொழிவை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கியுள்ளது.

இந்நிலையில், குறித்த முன்மொழிவு தொடர்பாக கலந்தாலோசிக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த வாரம் ஒன்றுகூடவுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 21 நாள்களுக்கு மின்சாரக் கட்டணத்தை திருத்துவது குறித்து பொது மக்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அந்த 21 நாள்களுக்கு மக்கள் தமது கருத்துக்களை எழுத்துபூர்வமாக சமர்ப்பிக்க முடியும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (05)

# வைத்தியரை தாக்கிய 2 ஊழியர்கள் கைது!



வைத்தியர் ஒருவரை தாக்கிய இரண்டு ஊழியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என காலி பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, கராப்பிட்டிய வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவில் கடமையாற்றும் விசேட வைத்தியரான கிரிஸாந்த பெரேராவை தாக்கிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஒருவர் காலி கொட்டவாகம பிரதேசத்தைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர் எனவும் மற்றையவர் அக்குரஸ்ஸ தியலபே பிரதேசத்தைச் சேர்ந்த பெண் சுகாதாரப் பணியாளர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற பணிப்புறக்கணிப்பில் புற்றுநோய் பிரிவின் ஊழியர்கள் கலந்து கொள்ளமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், இளநிலை ஊழியர்கள் கலந்துகொண்டமை தொடர்பில் வைத்தியருக்கும் இளநிலை ஊழியர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஊழியர்கள் இருவரை தாக்கிய குற்றச்சாட்டில் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்ட வைத்தியர் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## செய்யவேண்டியது அதிகம்

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக மக்களாட்சித் தத்துவத்தின் கீழ் போட்டி மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் தலைவர் என்ற பெருமையை அவர் பெற்றிருக்கின்றார். அதற்கு வாழ்த்துக்கள். அவரது இந்தத் தெரிவு அந்தக் கட்சிக்கு மட்டுமல்ல போருக்குப் பின்னரான காலத்தில் ஈழத் தமிழர் கட்சிகளினதும் அமைப்புக்களினதும் உட்கட்சி ஜனநாயகத்துக்கான மறுமலர்ச்சியாகவும் அமைந்திருக்கின்றது.

இந்தப் போட்டி, தலைவர் பதவிக்கான தேர்தல் தமிழ் அரசுக் கட்சியை உடைத்துவிடும் என்றும் தமிழ்த் தேசியத்திற்கான அழிவு என்றும் பலரும் விமர்சனங்களையும் கண்டனங்களையும் தெரிவித்து வந்த நிலையிலும் தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து போட்டியைச் சந்தித்து அதன் வெற்றி தோல்விகளை இயல்பாக எடுத்துக்கொண்டு, தொடர்ந்து ஒற்றுமையாகவே பயணிப்போம் என்று முக்கிய இரு வேட்பாளர்களுமான சிறீதரனும் சுமந்திரனும் உறுதியளித்திருப்பது பாராட்டுக்குரியது. அதேநேரம் இந்த வெற்றி மட்டுமே அடைவு அல்ல என்பதையும் அதற்கும் மேலாக ஆற்றப்படவேண்டிய பணிகளும் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றவேண்டிய கடப்பாடும் இன்னும் அதிகம் உண்டு என்பதைப் புதிய தலைவருக்கு நினைவூட்டுவதும் அவசியமாகின்றது.

தமிழ் அரசுக் கட்சி தனது வரலாற்றில் தலைமைப் பதவிக்கான ஒரு தேர்தலை எதிர்கொண்டதில்லை. ஒருமனதாகவே தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். அது பழைய அணுகுமுறை. அதனை மாற்ற முற்பட்டு முதல்முறையாகத் தேர்தல் என்றதும் பெரும் பதற்றம் ஏற்பட்டது. ஆனால், வரலாற்றில் முதன் முறையாக தேர்தலை எதிர்கொண்டு, அதன் முடிவுகளையும் இயல்பாக ஏற்றுக்கொண்டு வரலாற்றில் புதிய பாதையைத் தமிழர் அரசுக் கட்சியின் அடுத்த தலைமுறைத் தலைவர்கள் உருவாக்கியிருப்பதைப் போலவே தமிழ் இனத்திற்கான தலைமையை வழங்குவதிலும் பழைய காலாவதியாகிப்போன வழிமுறைகளை ஒதுக்கி வைத்துவிட்டுப் புதிய தீர்வுகளையும் வழிகளையும் கண்டறிவதும் செயற்படுத்துவதும் புதிய தலைவரின் முன்பாக உள்ள பெரும் சவால்.

தமிழர் அரசியல் இன்று முன்னகர முடியாத முட்டுச் சந்தில் சிக்கிக்கொண்டுள்ளது. அது கட்சியின் தலைவர் தேர்தல் போன்று இலகுவான ஒன்றல்ல. அரசியல் மற்றும் ராஜதந்திரத்தில் பழம் தின்று விதை போட்ட சிங்களத் தலைவர்களையும் ராஜதந்திரிகளையும் எதிர்கொண்டு சமாளித்து முன்னகர வேண்டிய பணி அது. அதற்குரிய வகையில் புதிய தலைவர் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்வதும் தகவமைத்துக்கொள்வதும் கட்டாயம். குறைந்தபட்சம் அதற்குப் பொருத்தமானவர்களைத் தெரிந்தெடுத்துக் கூடவே வைத்துக்கொள்வதும் அவசியம்.

இந்தத் தேர்தலை விட்டுக்கொடுப்பற்ற வடக்கு கிழக்கு மைய தமிழ்த் தேசியத்திற்கும் நெகிழ்வுத் தன்மையுள்ள கொ–ழும்பு மைய தமிழ்த் தேசியத்திற்கும் இடையிலான போட்டியாகவும் பார்க்கமுடியும். அதில் இறுக்கமான தமிழ்த் தேசியமே தேவை என்கிற ஆணையைக் கட்சியினரிடம் இருந்து சிறீதரன் பெற்றுள்ளார். அதனை வெற்றிகரமாக கொழும்பில் செல்லுபடியாக வைப்பதற்கான நுட்பமான அரசியல் நகர்வுகள் தேவையாக இருக்கின்றன. நாங்கள் எதைச் செய்தாலும் கொழும்பு அசைகிறது இல்லை என்கிற பதிலைச் சொல்வதற்கு ஒரு புதிய தலைமை அவசியம் இல்லை என்பதை நினைவில் வைத்திருப்பது அவசியம்.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் தமிழ் அரசுக் கட்சி அரசியல் ரீதியாக சுரத்திழந்து கிடந்த நிலையில் அதனைத் தூக்கி நிறுத்தி உத்வேகம் கொள்ள வைப்பதற்கான வாய்ப்பையும் இந்தப் புதிய தலைவர் தேர்தல் வழங்கியிருக்கிறது. அதே உற்சாகத்தோடு கட்சியை மீளக் கட்டமைத்துப் பலப்படுத்தி எதிர்கால அரசியல் நோக்கி வழிப்படுத்தவேண்டும். வெற்றி பெற்ற பின்னர் சிறீதரன் தெரிவித்ததைப்போன்றே, இந்தத் தேர்தல் கட்சியின் இளைஞர்களிடம் ஒரு புதிய ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதனைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

தமிழ்த் தேசியம்தான் தனது தலையயாய நோக்கம் என்றும் சிறீதரன் கூறியிருக்கின்றார். இன்றுள்ள நிலையில் தமிழ்த் தேசியம் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளது. அதனை மீண்டும் கட்டியெழுப்புவது மட்டுமல்ல, தமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கான தமிழர்களின் போராட்டக் குணத்தை மீட்டெடுப்பதும் சிறிதரனின் முன்னாள் உள்ள இமாலயக் கடமை. வெறும் அறிக்கைகளால் அரசியல் செய்யும் தலைவர்கள் மீதான விசனமும் ஏமாற்றமும்தான் புதிய தலைமை என்கிற பதவியில் தன்னை அமர்த்தியிருக்கின்றது என்பதைக் கருத்தில் கொண்டு ஒரு செயல்வீரரராக அவர் தன்னை நிலைநிறுத்துவதும் தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் முக்கியமானது.

அதேபோன்று தனது வெற்றியில் புலம்பெயர் தமிழர்களுக்கும் முக்கிய பங்கு இருப்பதை சிறீதரன் தேர்தல் முடிவுகளின் பின்னர் வெளிப்படுத்தியிருந்தார். வேட்பாளர்கள் மூவரில் அவரைத் தமிழ்த் தேசியத்தின்முகமாகபுலம்பெயர்தமிழ்ச்சமூகம்கருதியதன்விளைவாக அது அவரை ஆதரித்து நின்றிருக்கலாம். அதேநேரம் எந்தவொரு தீர்வும் வெளியிலிருந்து திணிக்கப்படமுடியாது என்பதையும் அது இயல்பாக இங்குள்ள மக்களின் முயற்சியுடனும் விருப்பதுடனும் ஆதரவுடனும் மட்டும்தான் சாத்தியமானது என்பதையும் அதற்கு ஆதரவளிக்கும் வகிபாகத்தையே புலம்பெயர் சமூகம் கொண்டிருக்க முடியும் என்பதையும் புதிய உணர்ந்து நடப்பதும் அவசியமானது.

# புட்டினின் ஆட்சி எதுவரை தொடரும்?

ஐங்கரன் விக்கினேஸ்வரா



71வயதாகும் ரஷ்யாவின் தலைவர் விளாடிமிர் புட்டின் முதன்முதலில் பொறிஸ் யெல்ட்சினுக்கு பின்னர் 2000ஆம் ஆண்டு அதிபர் பதவியை ஏற்றார். அவரது பதவிகாலம் வரும் 2024இல் நிறைவடைகிறது. ரஷ்யா நாட்டு சட்டப்படி ஒருவர் தொடர்ந்து இரண்டு முறைக்கு மேல் அதிபர் பதவியில் இருக்க முடியாது.

ரஷ்யாவில் இரண்டு முறைக்கு மேல் தொடர்ச்சியாக அதிபராக இருக்க முடியாது




– Mikhail Khodorkovsky



Alexei Navalny



என்பதால் 2008இல் தனது நம்பிக்கைக்குரிய டிமிட்ரி மெட்வெடேவ் என்பவரை அதிபராக்கினார் புட்டின். அதன் பின்னர் 2012ஆம் ஆண்டு மீண்டும் புட்டின் ரஷ்ய அதிபராகப் பதவியேற்றார்.

இதன் பின் அதிபரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகளில் இருந்து ஆறு ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டது. ஆறு ஆண்டுகள் அதிபர் பதவியில் இருந்த புட்டின், மீண்டும் 2018இல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயினும் அந்த தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாகவும் எதிர்க்கட்சியினரின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் புகார் எழுந்தன. இருப்பினும், அந்தத் தேர்தலில் புட்டின் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

இதன் பின் மீண்டும் அரசியல் சட்டத்தை மாற்றி, ஒருவர் நான்கு முறை வரை தொடர்ந்து அதிபர் பதவியில் இருக்கும் சட்டத்தை புதிதாக புட்டின் முன்மொழிந்துள்ளார்.

### 2036 வரை அதிபர் பதவியில் ?

அதாவது, எதிர்வரும் 2036ஆம் ஆண்டு வரை ரஷ்யா அதிபர் பதவியில் தொடரும் வகையில் புதிய உத்தரவை விளாடிமிர் புட்டின் பிறப்பித்துள்ளதாக சில ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதன் மூலம் அடுத்த இரண்டு தேர்தல்களில் அவரால் போட்டியிட முடியும்.

ரஷ்ய மக்களிடையே நடத்தப்பட்ட வாக்கெடுப்பிலும் பெரும்பாலான மக்கள் இதற்கு ஆதரவாகவே வாக்களித்தனர். இதையடுத்து இந்தச் சட்டத்திற்கு புட்டின் ஒப்புதல் வழங்கினார்.

ரஷ்யாவுக்குள் நிலவும் தற்போதைய அரசியல் பிரச்சினைகளை மையப்படுத்தி, வலிமைமிக்க விளாடிமிர் புட்டினின் ஆட்சி ஆதிக்கத்தை விரைவில் முடிவுக்கு கொண்டு வர மேற்குலகும்-அமெரிக்காவும் திடமாக முயல்கின்றன. அதிபர் புட்டினின் நீண்ட ஆட்சி நிரந்தரமாக இருக்க முடியாது என்பது உண்மையே.

அண்மையில் ரஷ்யாவின் வலிமைமிக்க விளாடிமிர் புட்டின் (Vladimir Putin) அதிகாரத்தை உலுக்கிய வாக்னர் படைகளின் தலைவர் எவ்கெனி ப்ரிகோஜின் கிளர்ச்சியினால் புட்டின் சந்திக்கவிருந்த சவால் சில நாட்களில் பிசுபிசுத்துப் போனது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் புட்டின் உக்ரேன் மீது முழு அளவிலான போரைத் தொடங்கிய நிலையில், இப்போது அவருக்கான முடிவு காலம் தொடங்கிவிட்டது என அப்போதே மேற்குலக ஊடகங்கள் ஊகம் தெரிவித்தன. அத்துடன் உக்ரேன் மீதான ரஷ்யாவின் போரால் அவரது நாட்கள் எண்ணப்படுவதாக உக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கியும் நம்புகின்றார் என மேற்குலக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

### புட்டினுக்கு பின்னர் ரஷ்யாவின் தலைமை?

புதிய சட்டத்தின் மூலம் அடுத்த இரண்டு தேர்தல்களில் புதினால் தேர்தலில் போட்டியிட முடியும். அதாவது 2036ஆம் ஆண்டு வரை அதிபர் அவரால் இருக்க முடியும். உயிருடன் இருக்கும் வரை அதிபர் பதவியில் தொடரவே புட்டின் இச்சட்டத்தைக் கொண்டு வந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

புட்டின் ஆட்சி அதிகாரத்தின் பின்னர், ரஷ்ய கூட்டமைப்பின் அடுத்த தலைவராக, புட்டினுக்கு பதிலாக யார் என்பதை உலகம் உற்று நோக்கிப் பார்க்கின்றது.

### முன்னாள் அதிபர் டிமிட்ரி மெடிதேவ்

லெனின்கிராட்டை பூர்வீக கொண்ட முன்னாள் சட்டப்பேராசிரியரும், புட்டின் நீண்டகால கூட்டாளியாக டிமிட்ரி மெடிதேவ் (ம்துஷ்மிஷதீ னிள-தீள-ளஸ) 2008 முதல் 2012 வரை ரஷ்யாவின் அதிபராக நான்கு ஆண்டுகள் பணியாற்றியவர். பின்னர் மெடிதேவ் 2012 முதல் 2020 வரை பிரதம மந்திரி பதவி வகித்தார்.

இப்போது ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவரான மெடிதேவ், உக்ரைனிய போரைப் பற்றி ஒரு போர்க்குணம்மிக்க தொனியில் தாக்கியுள்ளார். இந்த உக்ரைனிய மோதல் மிக நீண்ட காலத்திற்கு நீடிக்கும். பல தசாப்தங்களாக, அநேகமாக நீடிக்கும் எனக் கூறியுள்ளார். நீண்ட காலமாக புட்டினுக்கு அடிபணிந்து வந்த ஒருவரான மெடிதேவ், அடுத்த ஆட்சியைப் பிடிக்க முடியுமா என்பது பற்றிய பல கேள்விகளும் ஐயங்களும் உள்ளன.

### தாராளவாத சீர்திருத்தவாதி செர்ஜி கிரியென்கோ:

2022 இல் உக்ரைனிலிருந்து ரஷ்யா கைப்பற்றிய பகுதிகளில் பொது வாக்கெடுப்பை நிர்வகிக்கும் பணி 60 வயதான செர்ஜி கிரியென்கோவிடம் (Sergei Kiriyenko) வழங்கப்பட்டது. 1990களில், செர்ஜி கிரியென்கோ என்று அறியப்பட்ட ஒரு தாராளவாத சீர்திருத்தவாதி, அப்போதைய ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் அவரை 1998இல் நாட்டின் இளைய பிரதமராக ஆக்கினார். கிரியென்கோவின் பதவிக்காலம் சோவியத்துக்கு பிந்தைய நாட்டின் மிக மோசமான நிதி நெருக்கடியுடன் தொடர்புபட்டிருந்தது. அவர் நான்கு மாதங்களுக்குப் பிறகு பதவி விலக வேண்டிய

கட்டாயமும் ஏற்பட்டது. செர்ஜி கிரியென்கோ பதவியின்போது, கேஜிபி எனப்படும் ரஷ்ய உளவு நிறுவனத்தின் இன் வாரிசு நிறுவனமான எவ்எஸ்பி (ய்றீய) இன் தலைவராக புட்டினை நியமிப்பதற்கான முடிவையும் எடுத்தார்.

– Mikhail Mishustin



– Dmitry Medvedev



Nikolai Patrushev



– Alexei Dyumin



– Dmitry Patrushev



### சிறப்பு படைத் தளபதி அலெக்ஸி டியூமின்:

ரஷ்ய அரசிற்குள் பல்வேறு பாத்திரங்களை வகித்த 50 வயதான அலெக்ஸி டியூமின் (புயிளமுளஷ் ம்தீற்துஷ்ஜ) இராணுவ உளவுத்துறை பணியகமான ஜிஆர்யு (GRU) இன் துணை இயக்குநரும்

இப்போது துலா பிராந்திய ஆளுநரும் ஆவார். 2014 இல் கிவ்வில் ஜனநாயக சார்பு எழுச்சிக்குப் பிறகு ரஷ்ய சார்பு உக்ரேனிய ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை நாட்டைவிட்டு வெளியேற்றுவதில்

டியூமின் முக்கிய பங்கு வகித்தார். பின் னர் உக்ரைனில் இருந்து கிரிமியாவைக் கைப்பற்றுவதற்கான வெற்றிகரமான நடவடிக்கையில் சிறப்புப் படைத் தளபதியாகப் பணியாற்றினார்.

பாதுகாப்பு மந்திரி செர்ஜி ரோய்குவின் துணையாளராக இருந்த டியூமின், அந்த இடத்தைப் பிடிக்க முயன்றார் என்று சமீபத்திய நாட்களில் வதந்திகளுக்கும் உட்பட்டார். (7ஆம் பக்கம் பார்க்க....)

காலைக்கதிர் Kalaikkathir

# அரசு முன்னெடுக்கும் பொருளாதார மறுசீரமைப்பு பலன்கள் நாட்டு மக்களுக்கே கிடைக்கப்பெறும்!

## சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டு

எதிர்க்கட்சிகள் எந்த வகையான விமர்சனங்களை முன்வைத்தாலும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் புதிய பொருளாதார மறுசீரமைப்புக்களின் பலன்கள் எதிர்காலத்தில் மக்களுக்கு கிடைக்கும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாட்டை முன்னேற்றும்போது சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு தெற்கு பொலிஸ் பிரிவின் சமூக பொலிஸ் குழுக்களைத் தெளிவூட்டும்வகையில்கொழும்புநெலும் பொக்குன கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் -

நாட்டின் முன்னேற்றத்திற்கு சட்டதையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். அதேபோல் முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த சூழலையும் உருவாக்க வேண்டும். எதிர்கால சந்ததியின் பாதுகாப்பிற்கும் சட்டமும் சமாதானமும் வலுவூட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சட்டம், சமாதானம் தொடர்பிலான வெளிப்படைத்தன்மை காணப்படுகிறது. அதற்கு அவசியமான மூலதனம், மனித வளம், தொழில்நுட்பம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. நாம் அதே நிலைக்குச் செல்ல வேண்டும்.

பொருளாதாரம் சரிவடைந்து கிடந்த நிலையிலேயே நாம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். இரு வருடங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை பலரும் மறந்துவிட்டனர். நாட்டுக்குள் எரிபொருள் வரிசை காணப்பட்டது. எரிவாயுவுக்கு வரிசை காணப்பட்டது. மருந்து பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவியது.

ஆனால் இன்று நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் இருந்தாலும் அடுத்த நாளை எவ்வாறு கடத்துவது என்ற கேள்விக்குறியான நிலைமை இல்லாமல் போயுள்ளது.

தற்போது நிலைப்படுத்தப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு எம்மை சார்ந்திருக்கிறது. அதற்கமைய முதல் இரு வருடங்களும் நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்காகசெலவிடப்பட்டது. நாட்டு மக்களும் அதற்கு பெருமளவில் பங்களிப்பு செய்தனர்.

அந்த பயணத்தின் அடுத்த கட்டத்தையும் கவனமாகவே தொடர வேண்டும். நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஆரம்பித்துள்ளோம். சரிவடைந்த விவசாயத்துறையை மீளகட்டியெழுப்பும் வகையில் உரக் கொள்கைகளை மாற்றியுள்ளோம்.

இவ்வாறான பல்வேறு பொருளாதார மறுசீரமைப்புக்களை நாட்டுக்குள் முன்னெடுத்துள்ளோம். அன்று 5 சதவீதமாக இருந்த நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை 16 சதவீதமாக அதிகரிக்கும் இயலுமை கிட்டியுள்ளது.

சுற்றுலாத்துறையை நாம் இலகுவாக அபிவிருத்தி செய்யலாம். இன்றளவிலும் சுற்றுலாத்துறை முன்னேற்றமடைந்துள்ளது. 25 லட்சம் சுற்றுலா பயணிகள் இவ்வருடத்தில் இலங்கைக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலா அபிவிருத்திக்காக அன்று மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இன்று பலனளிக்கின்றன. அதனால் அந்நிய செலாவணியும் அதிகமாகக் கிடைக்கிறது.

அதேபோல் துறைமுக அபிவிருத்தி, இறங்குதுறை மற்றும் இடைமாற்ற சேவைகளை அதிகரித்தல் ஆகியவற்றுக்கான திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. திட்டங்களுக்கு மேலாக நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும் உள்ளது. கொழும்பு துறைமுகத்தின் இறங்குதுறைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

எமது நாட்டின் இளம் சமூகத்தினர் தொழில்நுட்ப துறையில் உயர்வான நிலையில் உள்ளனர். அதனூடான வெளிநாட்டு வருமானத்தைப் பெறுவதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படுகிறன. எமது நாட்டுக்கும் இளைய சமுதாயத்தினருக்கும் சிறந்த எதிர்காலம் உள்ளது. ஆனால் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் மத்தியில் நம்பிக்கை இல்லாதபோது நாட்டைக்கட்டியெழுப்ப முடியாது.

சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகள் நாட்டுக்கு மிகவும் அவசியமாகும். நாடு மீண்டும் பொருளாதாரசரிவைச்சந்திக்கஇடமளிக்க கூடாது. எதிர்க்கட்சிகள் எவ்வகையான விமர்சனங்களை முன்வைத்தாலும் அரசாங்கம்முன்னெடுக்கும்பொருளாதார மறுசீரமைப்புக்கள்,மக்களுக்குபலனளிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. சர்வதேசத்திற்கு எமது நாடு தொடர்பிலான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையைப் பாதுகாக்கும் வகையில் நாட்டின் முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியப்படுகிறது.

அதேபோல் நாடு முன்னேற்றம் அடையும் போது சமூகத்திலிருந்து போதைப்பொருள் ஒழிக்கப்பட வேண்டும்.

நாட்டின் முன்னேற்றத்தைப் பொறுப்பேற்க வேண்டிய இளம் சமூகத்தினர் போதைப்பொருள் பாவனையால் அழிக்கப்படுகின்றனர்.

அதனை கண் முன்னே காண்கிறோம். அதற்காகவே 'யுக்திய' முன்னெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் பாவனை உலகத்தையே உலுக்குகிறது. அவற்றை ஒழிக்க வேண்டும்.

அதற்கும் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். போதைப்பொருள் ஒழிப்புக்காக பொலிஸார் உள்ளிட்ட பாகாப்புத் தரப்பினர் அர்பணிப்புடன் செயற்படுகின்றனர்” என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மகா சங்கத்தினர் தலைமையிலான மதத் தலைவர்கள், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர, சிரேஷ்ட அதிகாரிகள், சமூக பொலிஸ் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(05)





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chiken Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# ரணிலுக்கான ஆதரவை அதிகரிக்கும் நோக்கம்: பொதுஜன பெரமுன வேட்பாளரை நிறுத்தாது!

## சண்டே டைம்ஸ் கருத்து

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்துவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்துள்ள சண்டே டைம்ஸ், ரணில் விக்கிரமசிங்கவின் வாக்கு வங்கியை அதிகரிப்பதே இதன் நோக்கம் எனவும் தெரிவித்துள்ளது.

இது குறித்து சண்டே டைம்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் நிலைப்பாட்டில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கட்சியின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த விடயங்களிற்கு அப்பால் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ புதிய நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார். நாங்கள் இன்னமும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் குறித்து தீர்மானிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 14 ஆம் திகதி நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனதனதுவேட்பாளரை நிறுத்தவேண்டுமா என்பதை இன்னமும் தீர்மானிக்கவில்லை என அவர் முக்கியமாகத்; தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்தில் மிக முக்கியமான விடயங்களை மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ளார்.

முதலாவதாக தம்மிக பெரேரா உட்பட நான்கு வேட்பாளர்கள் குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்தகருத்துக்கள்தற்போதுசெல்லுபடியற்றவையாகிவிட்டன என்பதை மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இன்னமும் தெளிவாக தெரிவிப்பதென்றால் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் மாற்றத்திற்குள்ளாகியுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசத்தின் நிலைப்பாட்டிற்கு மாறாக மஹிந்த ராஜபக்ஷ கருத்து தெரிவித்துள்ளார் எனத் தெரிவிப்பது பிழையில்லை.

இந்த மாற்றம் ஏன் ஏற்பட்டது? குறிப்பாக ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னதாக இந்த மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது?

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என விடயங்கள்குறித்து நன்கு அறிந்த இரண்டுதரப்புகள் தெரிவித்துள்ளன.

தற்போதைய நிலைப்பாடு என்னவென்றால் கட்சி ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளரை நிறுத்தாது என்பதே என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ரணில்விக்கிரமசிங்கவின் வாக்குவங்கியை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு இந்த யோசனை காணப்படுகின்றது.

இதன் காரணமாக ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவிற்கு எதிர்பாராத நன்மையொன்றும் கிட்டலாம். கட்சியிலிருந்து சிலர் வெளியேறியுள்ள நிலையில் ஏனையவர்களைத் தொடர்ந்தும் தக்கவைக்கலாம்.

மேலும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிமல் லான்சா தலைமையிலான புதிய கூட்டணியில் இணைவதை இது தடுக்கும்.

இவ்வாறான சூழ்நிலையில் ஏன் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவால் ரணில்விக்கிரமசிங்க என்ற வேட்பாளருக்கு வெளிப்படையாக ஆதரவை தெரிவிக்க முடியாது?

இதற்கான காரணத்தை விடயமறிந்த மற்றுமொரு தரப்பு முன்வைத்துள்ளது.

கட்சி பிளவுபடலாம் என்ற அச்சமே இதற்கு காரணம்ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவைஎதிர்க்கும் மற்றுமொரு கட்சிக்கு ஆதரவளிப்பதை வெறுக்கும் பல உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் உள்ளனர் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் பெரும்பான்மையானவர்கள் ரணில்விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதற்கான சந்தர்ப்பம் அதிகமாக காணப்படுகின்றது.

எனினும் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் சிரேஸ்ட தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி கட்டத்திலாவது இணைந்துகொள்வார்களா என்ற கேள்விக்கு விடைகிடைக்கவில்லை. என்றுள்ளது

(05)

# தேர்தல்களை வெல்வதற்கான குறுகிய நடவடிக்கையாக கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்தை ஒடுக்கும் முயற்சிகள்

## ஊடக சிவில் சமூக தொழிற்சங்க கூட்டமைப்பு கடும் குற்றச்சாட்டு

மக்களின் பேச்சுசுதந்திரம், கருத்துசுதந்திரம் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதன் மூலம் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் அரசின் முயற்சிகளைக்கூட்டாகமுறியடிப்போம் என ஊடக சிவில் சமூக தொழிற்சங்க கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமூக அரசியல் அமைப்பில் ஆழமான மாற்றங்களை எதிர்பார்க்கும் குடி மக்கள் என்ற அடிப்படையில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான பொதுமக்களின் கருத்துரிமையைக் கட்டுப்படுத்தும் ஒருங்கமைப்பதற்கான உரிமை, சிவில் செயற்பாடுகளிற்கான உரிமைகளைக் கட்டுப்படுத்தும் அடக்குமுறை சட்டங்களைக் கொண்டுவந்து நாட்டைசர்வாதிகாரத்திற்குள்கொண்டு செல்லும் முயற்சிகள் குறித்து எங்களின் ஆழ்ந்த கவலையை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அடுத்தவாரம் அரசாங்கம் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற திட்டமிட்டுள்ளது பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை ஏனைய ஒடுக்குமுறை சட்டங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எண்ணியுள்ளது அரசாங்கத்தின் இந்த முயற்சிகள் எதிர்வரும் தேர்தல்களை எப்பாடுபட்டாவது வெல்வதற்கான குறுகிய நடவடிக்கையாக மக்களின் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை ஒடுக்குவதற்கான முயற்சிகள் இடம் பெறுவதை வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கையின் இறைமைக்கு உரித்துடையவர்களான பொதுமக்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்க வாதிகள் என்ற அடிப்படையில்ஜனாதிபதிபொதுமக்கள் ஆணைமூலம்தெரிவுசெய்யப்படவில்லை என உறுதியாக நம்புகின்றோம். மேலும் மக்களால் நிராகரிக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு ஒடுக்குமுறை சட்டங்களை நிறைவேற்றுவதற்கான புதிய சட்டங்களை திணிப்பதற்கான ஆணையில்லை.

பொதுமக்களின் மீது தாங்கிக்கொள்ளமுடியாத அழுத்தங்கள் திணிக்கப்பட்டதால் அமைப்பு முறை மாற்றத்தை கோரியும் ஊழல் அற்ற மக்களிற்கு சிநேகமான ஜனநாயக அரசாங்கத்தைக்கோரியும்இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின் பின்னர் இடம்பெறும் தேர்தல்கள் என்பதால் எதிர்வரும் தேர்தல்கள் நாட்டிற்கு மிகவும் முக்கியமானவை.

தணிக்கையற்ற துல்லியமான பக்கச்சார்பற்ற தகவல்களை அடிப்படையாக வைத்து மக்கள் விவாதிப்பதற்கான கருத்துபரிமாறுவதற்கான தளத்தை கொண்ட சுதந்திரமான நியாயமான தேர்தலாக எதிர்வரும் தேர்தல் அமைவதை உறுதிசெய்யவேண்டும்.

தங்கள் கொள்கைகளை, எண்ணங்களை மக்களிற்கு தெரிவிப்பதற்கான அனைத்து வாய்ப்புகளும் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும்உறுதிப்படுத்தவேண்டும்.

குடிமக்களை மௌனமாக்கும் அச்சத்திற்கு உட்படுத்தும் எந்த சட்டங்களும் மக்களுக்கு சிநேகபூர்வமானசூழல்ஜனநாயகத்திற்குபாதிப்பை ஏற்படுத்துபவை.

நீண்டகாலமாக சில அரசியல்வாதிகளாலும் ஊழல் அதிகாரிகளாலும் அழிவைநோக்கிதள்ளப்பட்டநாட்டிற்கு சட்டத்தின் மேல் அமர்ந்திருக்கும் சர்வாதிகாரிகள் அவசியமில்லை.

(05)




காலைக்கதிர் Kalaikkathir

## ஆபிரிக்காவுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளதென அயலுறவு அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

“ஆபிரிக்காவைப் பார்ப்போம்’ என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவிற்கு அமைவான இலங்கையின் புதிய பொருளாதார பயணத்திற்காக ஆபிரிக்க நாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பின்னணி ஜனாதிபதியின் இந்தப் பயணத்தின் ஊடாக உருவாகியிருக்கிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உலகளாவிய பிரச்சினைகள், காசா பகுதியின் நிலவரம், இஸ்ரேல் -பாலஸ்தீன நிலவரம், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள், கடன் சுமையில் முடங்கிக் கிடக்கும் தரப்பினரை மீட்பதற்கான முன்னெடுப்புகள், காலநிலை அனர்த்தம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்த உரையை வெளிநாட்டு பிரதிநிகள் பாராட்டினர்.

அதற்கு இணையாக ஆபிரிக்க வலயத்தின் தென் துருவ நாடுகளின் தலைவர்களையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சந்தித்து கலந்துரையாடினார். மாநாட்டினை நடத்திய உகண்டாவின் ஜனாதிபதி, எத்தியோப்பிய பிரதமர், பெனின் குடியரசின் உபஜனாதிபதி, பஹாமாஸ் பிரதமர், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை ஜனாதிபதி ரணில் விக்ரசிங்க சந்தித்திருந்தார். மேலும் குறித்த நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திகொள்வது தொடர்பிலும் அவர் கலந்துரையாடினார்.

பெருமளவில் பேசப்படாத, 1.3 பில்லியன் மக்கள்தொகை கொண்ட, எதிர்காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியடையும் என்று உலகம் எதிர்பார்க்கும் ஆபிரிக்க நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்த இந்தப் பயணம் வித்திட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் இலங்கை அடைந்து வரும் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதற்கு ஜனாதிபதியின் பங்களிப்பு ஆகியன இதன்போது அனைவராலும் பாராட்டப்பட்டது. ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், இந்த நாடு இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் தற்போது இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அனைவரும் பாராட்டினர்.

குறிப்பாக, உகண்டாவின் ஜனாதிபதி யொவேரி முசெவேனி, வீழ்ச்சி அடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்ப அவர் ஆற்றிய பங்களிப்புக்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

மேலும், இம்முறை அணிசேரா நாடுகளின் மாநாட்டின் ஊடாக, இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்த உண்மைகளை சர்வதேசசமூகத்திற்கு முன்வைக்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. அத்துடன், ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை வளர்த்துக்கொள்ள ஜனாதிபதியின் இந்த விஜயம் உதவியது என்றே கூற வேண்டும்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ’ஆபிரிக்காவைப் பார்ப்போம்’ என்ற எண்ணக்கருவின் கீழ் இலங்கைக்கான புதிய பொருளாதாரப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு ஆபிரிக்க நாடுகளில் முதலீடு செய்வதற்கு இதன்போது அடித்தளமிடப்பட்டது.

அதற்கமையவே, இரு நாடுகளும் பயனடையும் என்ற நோக்குடன் பெனின் குடியரசுடன் இராஜதந்திர, உத்தியோகபூர்வ மற்றும் சேவை கடவுச்சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு விசா விலக்கு அளிக்க தீர்மானிக்கப்பட்டது.

மேலும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் என்ற முறையில், பங்களாதேஷ், பஹ்ரைன், கானா, தன்சானியா, அஸர்பைஜான் போன்ற பல்வேறு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தும் வாய்ப்பும் எனக்கு கிடைத்ததோடு, அந்த நாடுகளுடன் நட்புறவை மேலும் பலப்படுத்திக்கொள்ளவும், பொருளாதார உறவுகளை ஏற்படுத்தவும் வாய்ப்பு கிட்டியது.

எனவே, இவ்வாறான மாநாடுகளின் மூலம் சர்வதேச நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தி, நாட்டுக்கு நன்மைகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம் என்றார்.

## அதிக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு இளைஞர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அதிகளவில் ஹெரோயின் பாவித்த நிலையிலேயே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணயநிதியத்தின் ஒத்துழைப்பினை புறந்தள்ளிவிட்டு எமக்கு முன்னோக்கிச் செல்ல முடியாது. அதற்காக அது சொல்லும் எல்லாவற்றுக்கும் தலையாட்டிக்கொண்டு இருக்கவும் முடியாது.

எமது நாடு நெருக்கடியில் உள்ளது. அதற்காக சோமாலியாவால் உணவளிக்கப்பட வேண்டுமா? இது சம்பந்தமாக நாம் கலந்துரையாடவேண்டியது அவசியம்.

அது மட்டுமல்ல சில கசப்பான செய்திகளையும் நாம் வெளிப்படுத்த வேண்யுள்ளது. நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் கசப்பான செயற்பாடுகளையும் வெளிப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

எமது ஆட்சியில் அவ்விதமான மாற்றங்களைச் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ஐ.தே.க. - பெரமுன எமக்கு சவாலில்லை!

## சரத் பொன்சேகா சுட்டிக்காட்டு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசிய கட்சியும் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ளன. ஆனால் இவ்விரு கட்சிகளும் பலவீனமடைந்த நிலையிலேயே உள்ளன. எனவே, இவை ஒருபோதும் எமக்கு சவாலான கட்சிகள் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்களே காணப்பட வேண்டும். கடந்த காலங்களில் மக்களின் தவறான தீர்மானங்களால் தவறான தலைவர்கள் தெரிவுசெய்யப்பட்டு நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு சென்றனர். எனவே, இனி-வரும் காலங்களில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்தால், நாம் அவர்களுடன் இருப்போம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ளன. பொதுஜன பெரமுனவால் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரே தற்போதைய ஜனாதிபதியாக உள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் பலவீனமடைந்த நிலைமையிலேயே உள்ளது. எனவே, இந்தக் கூட்டணி எமக்கு பாரிய சவாலாக அமையப்போவதில்லை.

மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப கட்சி முறையாக செயற்பட்டால் யார் யாருடன் கூட்டணி அமைத்தாலும் நாம் அச்சப்படத் தேவையில்லை. எமது நாட்டுக்கென கலாசாரமும் ஒழுக்கமும் காணப்படுகிறது. அவற்றுக்கு ஏற்பவே செயற்பட வேண்டும்.

யுக்திய என்ற பெயரில் பதில் பொலிஸ்மா அதிபரால் நாடகம் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு செயற்படுவதால் பாதாள உலகக் குழுவினரையும் கட்டுப்படுத்த முடியாது. போதைப்பொருளையும் அழிக்க முடியாது. - என்றார். (05)

# தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கு செந்தில் தொண்டமான் வாழ்த்துக்கள்!



தமிழரசுக் கட்சி யின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

உங்களுடைய சேவைக் காலத்தில் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வென்றெடுக்கப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்பதோடு, வடக்கு கிழக்கு தமிழர்கள் மாத்திரமின்றி நாடு முழுவதும் உள்ள தமிழர்கள் மேன்மேலும் வளர்ச்சி அடையத் தங்களின்பணிதொடரவேண்டும்என வாழ்த்துகிறேன்எனதெரிவித்துள்ளார். (05)

# அதிகளவு ஹெரோயின் பாவனையால் சாவகச்சேரியில் இளைஞர் உயிரிழப்பு!

அதிகளவுஹெரோயைபயன்படுத்திய இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை இரவு சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அந்த இளைஞர் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் போதைப்பொருள் வழக்கு ஒன்றுடன் தொடர்புடையவர் என்ற ரீதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, கடந்தவெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அதன்பின்னர், அவர்நீர்வேலியில் உள்ள உறவினரது வீட்டில் 19 ஆம் திகதி தங்கிவிட்டு, சனிக்கிழமை ஊருக்குத் திரும்பியுள்ளார்.

அதனையடுத்து, சனிக்கிழமை அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாக அவரது சகோதரனுக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது.

பிறகு, அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். அதன் பின்னரே இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், அவர் அதிகளவில் ஹெரோயின் பாவித்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர் மரணம் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிய உடற்கூற்று பரிசோதனைகளை சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# கர்ப்பிணிப் பசு அடங்கலாக மாடுகளை சட்டவிரோதமாக கொண்டுசென்றோர் கைது!

சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகளை ஏற்றிச் சென்ற மூவர் லொறியுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பதுளை - ஹாலிஎல திக்வெல்லவத்த பகுதியில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமடை, குருத்தலாவ மற்றும் அட்டம்பிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 34, 41 மற்றும் 44 வயதுடைய மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை கைது செய்யும்போது இரண்டு எருமை மாடுகளும், ஒரு கர்ப்பிணிப் பசுவும் லொறியில் அடைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹாலிஎல, கடவல பகுதியிலிருந்து வெலிமடை, குருத்தலாவ பகுதிக்கு இந்த மாடுகள் சட்ட விரோதமாக கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# உள்ளூராட்சி சபையின் முன்னாள் பெண் உறுப்பினர் பணமோசடியில் ஈடுபட்ட கைது

கேகாலை - ரம்புக்கனை உள்ளூராட்சி சபையின் முன்னாள் பெண் உறுப்பினர் ஒருவர் பண மோசடி குற்றச்சாட்டில் ரம்புக்கனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிவடுன்ன பிரதேசத்தை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

ரம்புக்கனை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடொன்றுக்கு அமைய குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நலத்திட்டங்கள், சுயதொழில் வாய்ப்புக்கள், இசை நிகழ்ச்சிகள், குறைந்த வருமானம் பெறுவோரின் குழந்தைகளுக்கு பயிற்சிப் புத்தகங்கள் வழங்குதல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பேஸ்புக் மூலம் இந்த பண மோசடி இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகருக்கும் வடக்கு ஆளுநருக்கும் இடையே விசேட சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜாவை, வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேரில் சந்தித்து கலந்துரையாடினார்.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் சனிக்கிழமை இந்த சந்திப்பு நடைபெற்றது.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது ஆளுநரால் இந்திய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டது. அதையடுத்து, இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி புரியும் என தெரிவித்த உயர்ஸ்தானிகர், விசேடமாக வட மாகாணத்துக்கான ஒத்துழைப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் உறுதியளித்தார். (05)

# புட்டினின் ஆட்சி எதுவரை தொடரும்?....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**உக்ரைன் போரின் மூலோபாயவாதி நிகோலாய் பெட்ருவே :**

ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சிலின் செயலாளர் நிகோலாய் பெட்ருவே (Nikolai Petrushev) ரஷ்ய கூட்டமைப்பை பலவீனப்படுத்த அல்லது உடைக்க மேற்கத்திய சதி உள்ளது என்ற கருத்தை என்றும் குற்றச்சாட்டாக முன்வைப்பவர். புட்டினுடன் கேஜிபியில் ஒன்றாகப் பணியாற்றியதிலிருந்து அவரை அறிந்திருக்கிறார்.

மேலும் 2014, 2022 உக்ரைன் படையெடுப்புகளில் முக்கிய மூலோபாயவாதியாக இருந்தார்.

அவரது கருத்துக்கள் புட்டின் எடுக்கும் முடிவுகளின் அடித்தளமாக அமைகின்றன. புட்டினின் நம்பிக்கைக்குரிய சில நபர்களில் இவரும் ஒருவர்.

மார்ச் 2023 இல் (Rossiskaya Gazetta) ரஷ்ய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், பெட்ருவே, வாஷிங்டனும் லண்டனும் மீண்டும் நாசிசம் மற்றும் பாசிசத்துடன் ஒத்துழைக்கின்றன. உக்ரைனைப் பயன்படுத்தி ஐரோப்பாவையோ அல்லது முழு உலகத்தையோ தீப்பிடித்து எரிக்க முயல்கின்றன. எதிலிருந்தும் தப்பிக்க முடியும் என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு எந்தக் கவலையும் அமைதியின் மீது இல்லை - என்றார்.

பெட்ருவே ரஷ்யாவின் புவியியல் இராஜதந்திரநிலைப்பாட்டை உயர்த்துவதற்காக பரவலாக உலகப் பயணம் செய்பவர். மேலும் சீனாவுடனான கூட்டணியை நிர்வகிப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளார். அதேவேளை பெட்ருவேின் 45 வயதான மகன் டிமிட்ரி, தற்போது விவசாய அமைச்சராக உள்ளார், மேலும் அவரே புட்டினின் எதிர்கால வாரிசு என்ற வதந்தியும் பரவலாக பரவியுள்ளது.

**2020 இல் பிரதமரான மிகைல் மிஷுஸ்டின் :**

57 வயதான பொருளாதார நிபுணரான மிகைல் மிஷுஸ்டின் (Mikhail Mishustin) 2020 இல் பிரதமராக நியமிக்கப்படுவதற்கு முன்பு நாட்டின் வரிப்பணியகத்தின் தலைவராக ஒரு தசாப்தம் பணியாற்றினார். உக்ரைன் போர் ஆரம்பித்து 2022 பெப்ரவரியில் இருந்து ரஷ்யா மீது போடப்பட்ட மேற்கத்திய பொருளாதாரத் தடைகளின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் மிகக் கவனம் செலுத்தினார்.

ஆயினும் 2022 போர் தொடங்கிய வேளை புட்டினின் படையெடுப்பு முடிவை அவர் எதிர்த்தார் எனவும் கூறப்படுகிறது. புட்டினை எதிர்கொள்வதற்குத் தயாராக இருப்பதைக் காட்டிலும் ஒரு மூலோபாய பின்வாங்கலாக, குறைவான சாதகமான நிபந்தனைகளில் ரஷ்ய ஆட்சியின் அடிப்படைக் கட்டமைப்புகளை அப்படியே வைத்திருப்பதன் பேரில் அவரை நன்கு நிலைநிறுத்தக்கூடும்.

**சிறையில் உள்ள அலெக்ஸி நவல்னிக்கு சாத்தியமா?**

சிறையில் அடைக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி (Alexei Navalny), புட்டினுக்குப் பிந்தைய ரஷ்யாவை வழிநடத்த விரும்பும் மிக முக்கியமான அரசியல்வாதியாக இருப்பதாக மேற்கத்திய ஊடகங்கள் பெரும் பரப்புரைகளை வெளியிட்டன.

முன்னைய ரஷ்யாவின் எதிர்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னிக்கு மோசடி மற்றும் நீதிமன்ற அவமதிப்புக்காக 9 ஆண்டுகள் கடுகாவல் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ரஷ்ய அரசியலில் புட்டினுக்கு சவாலாகக் கருதப்பட்ட அலெக்ஸி நவல்னிக்கு அடுத்தடுத்து வழங்கப்பட்டுள்ள சிறை தண்டனைகள் அவரது ஆதரவாளர்களிடத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ரஷ்ய அதிபர் புட்டினையும், அவரது அரசின் ஊழலையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி. அதிபர் தேர்தலின்போதும் தொடர் பரப்புரைகளில் ஈடுபட்ட அலெக்ஸி நவால்னிக்கு இளைஞர்கள் மத்தியில் பரவலான வரவேற்பு இருந்தது. ஊழலுக்கு எதிரான தனது அறக்கட்டளை மூலமாக பணத்தை முறைகேடாகக்கையாடல்செய்ததாக்எனக்கூறி 2013ஆம் ஆண்டு அலெக்ஸி மீது வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கில் மொஸ்கோ நீதிமன்றம் கடந்த வருடம் அவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

புட்டினை எதிர்த்த போரிஸ் நெம்ட்சோவ் போன்ற பிற எதிர்க்கட்சித் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பெப்ரவரி 2015இல் கிரெம்ளினுக்கு அருகிலுள்ள போல்ரோய் மோஸ்க்வொரெட்ஸ்கி பாலத்தில் தனது காதலியுடன் நடந்து சென்றபோது போரிஸ் நெம்ட்சோவ் சுட்டுக் கொல்லப்பட்டார். சந்தேகத்திற்கு இடமின்றி அவர் ரஷ்யாவின் மிக முக்கியமான எதிர்க்கட்சி அரசியல்வாதிகளில் ஒருவராக விளங்கியவர்.

அத்துடன் புட்டினை அரசியல் ரீதியாக எதிர்த்த மிகைல் கோடர்கோவ்ஸ்கி போன்றவர்களும் நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

**பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ரேய்கு:**

உக்ரைன் போரை வழிநடத்தும் செர்ஜி ரேய்கு (Sergei Shoigu) ரஷ்யாவின் அடுத்த சாத்தியமற்றவராகவே தென்படுகிறார். ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ரேய்கு ஜனாதிபதி தற்போது புட்டினால் ஓரங்கட்டப்பட்டுள்ளார். 67 வயதான ரேய்கு, 1991 முதல் 2012 வரை அவசரகால சூழ்நிலைகள் அமைச்சகத்திற்கு தலைமை தாங்கினார்.

அதன்பிறகு 2014இல் ரஷ்யாவுடன் கிரிமியாவை இணைப்பதற்கு ரேய்கு தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. உக்ரைனில் ரஷ்ய படைகளின் வெற்றி தாமதமடைந்து வருவதையடுத்து ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ரேய்கு ஜனாதிபதி புடினால் ஓரங்கட்டப்பட்டு வருவதாக அறிக்கைகள் வெளியாகி வருகின்றன.

உக்ரைனில் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையானது தலைநகர் கீவ்வை கைப்பற்றதவறிதற்போதுபோர்நடவடிக்கையானது நீண்டு வருகிறது. அரசியலில் நுழைவதற்கு முன்பு கட்டுமானத் துறையில் பல ஆண்டுகளாக பணியாற்றிய ரேய்கு, கணிசமான இராணுவ அனுபவம் இல்லாதவர்.

பிரித்தானிய உளவுத்துறையின் தகவலின்படி, உக்ரைன் போரில் விரைவான மற்றும் தீர்க்கமான வெற்றியை வழங்கத் தவறியதால் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ரேய்கு ஜனாதிபதி புட்டினால் பதவி இறக்கத்தை எதிர் கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய அதிபர் புட்டினின் நீண்ட ஆட்சி நிரந்தரமாக இருக்க முடியாது என்பது உண்மையே. இருந்தாலும் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு, 2036ஆம் ஆண்டு வரை ரஷ்யா அதிபர்

பதவியில் தொடர்வாரா அல்லது அடுத்த தலைமைக்கோ அல்லது அடுத்த தலைமுறைக்கோ ஆட்சி அதிகாரத்தை கையளிப்பாரா என்பது எவருக்கும் புரியாத புதிராகும்.

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.

DOWNLOAD PASSENGER APP

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store

## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?

விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

HOTLINE : 0706563213

JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்நாடு சிவசேனா அமைப்பால் சிலாபத்தில் வெங்கடாசலபதி ஆலயம் அமைக்க ஏற்பாடு!



இந்தியாவின் தமிழ்நாடு சிவசேனா அமைப்பு மற்றும் சாய் சமர்ப்பனா அறக்கட்டளை உள்ளிட்டவைஇணைந்துசிலாபத்தில் வெங்கடாசலபதி தேவஸ்தானமொன்றை அமைக்கவுள்ளன. இதற்காக முன்னேஸ்வரம் தேவஸ்தானத்துக்கு சொந்தமான காணி வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு சிவசேனா அமைப்பின் நிறுவனத் தலைவர் கே.சசிகுமார் தெரிவித்தார்.

கொழும்பு - தாஜ் சமுத்திரா ஹோட்டலில் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இந்திய - இலங்கை உறவை வலுப்படுத்தும் வகையில் எமது அறக்கட்டளை இலங்கையில் பல்வேறு சேவைகளைமுன்னெடுத்துவருகிறது. அந்த வகையில், கடந்த ஆண்டு மலையகத்தை சேர்ந்த 3000 குடும்பங்களுக்கு ஆடைகள் வழங்கப்பட்டன.

இவ்வாண்டு இலங்கையின் சகல பகுதிகளிலும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள 5000 பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் உள்ளிட்ட கற்றல் உபகரணங்களை வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

இந்நிலையில், இலங்கையில் வெங்கடாசலபதிஆலயத்தைநிறுவுவதற்கும் முயற்சித்து வருகின்றோம். அதற்கமைய இதற்காக ஆரம்பத்தில் கொழும்பிலும், பின்னர் கதிர்காமத்திலும் காணி வழங்குவதாகக் கூறப்பட்டது. எனினும் அது வெற்றியளிக்கவில்லை.

எவ்வாறிருப்பினும் தற்போது புத்தளம் மாவட்டத்தில் சிலாபத்தில் அமைந்துள்ள முன்னேஷ்வரர்தேவஸ்தானத்துக்குரிய காணி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியாக குறித்த காணி எமக்கு வழங்கப்பட்டதன் பின்னர், இந்தியாவிலிருந்து முக்கிய பிரமுகர்களின் பங்கேற்புடன் பூமிபூஜை இடம்பெறும்.

அதன் பின்னர் இரண்டு ஆண்டுகளுக்குள் ஆலய நிர்மாணப்பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். இந்திய-இலங்கை உறவைவலுப்படுத்த வேண்டும் என்ற பிரதமர் மோடியின் எண்ணத்துக்கு அமைய எம்மால் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

சாய் சமர்ப்பனா அறக்கட்டளை இதற்குப் பிரதான அனுசரணை வழங்குகிறது. அத்தோடுமயூரபதிபத்தரகாளி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையும் எமக்கு இந்நடவடிக்கைகளை உதவிகளை வழங்கி வருகிறது. இலங்கை - இந்தியாவுக்கிடையில் சிறந்த ஆன்மிக உறவை வலுப்படுத்துவதே எமது நோக்கமாகும். அதற்கமைய தமிழ், சிங்களம், வடக்கு, மலையகம் என எவ்வித பேதமுமின்றி நாம் சேவைகளை வழங்குவோம். இதில் எவ்வித அரசியல் நோக்கமும் இல்லை. - என்றார். (05)

# ஓய்வு பெற்ற வங்கிப் பாதுகாப்பு உத்தியோகத்தர் சடலமாக மீட்பு!

புத்தளம் ஆனமடுவ நகரில் அமைந்துள்ள கால்வாய் ஒன்றில் நபரொருவர் ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் ஓய்வுபெற்ற வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர் (வயது 64) எனவும் மூன்று பிள்ளைகளின் தந்தை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது சகோதரருடைய மகளின் திருமண வீட்டுக்குச் சென்றிருந்த நிலையிலேயே இவ்வாறு மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர். (05)

# யுவதி மீது தாக்குதல் இரு பெண்கள் கைது!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் யுவதி ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதாக இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பாதிப்படைந்த யுவதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கழிவு தண்ணீர் மற்றும் வெள்ள நீர் என்பன வீதியில் உள்ள வாய்க்கால் ஊடாகச் செல்வது தொடர்பில் அப் பகுதியில் உள்ள இரு வீட்டாரிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தது.

குறித்த பகுதி வடிகாலமைப்பு சீரற்ற நிலையில் காணப்படுவதாலும், அனுமதியற்ற கட்டடங்கள் காரணமாகவும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என வவுனியா தெற்கு பிரதேச சபைக்கு குறித்த வீட்டாரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதும் பிரதேச சபையால் அவை தீர்த்து வைக்கப்படவில்லை.

இந்நிலையில், குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றின் கழிவுநீர் வீதி வாய்கால் ஊடாக இன்னுமொரு வீட்டை அண்மித்து சென்ற நிலையில், கழிவு நீரை வீதிக்கு விட்ட வீட்டாருடன் அயல் வீட்டில் வசிக்கும் யுவதி ஒருவர் முரண்பட்டுள்ளார்.

இதன்போது இருபகுதியினருக்கும்வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், குறித்த யுவதி மீது இரு பெண்கள் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் காயமடைந்த 22 வயது யுவதி வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய தாக்குதல் மேற்கொண்டதாக 30 மற்றும் 25 வயதுடைய சகோதரிகளான இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் வவுனியாவில் அரச திணைக்களம் ஒன்றில் உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள பல வீதிகளில் வடிகாலமைப்பு சீர்செய்யப்படாத நிலை காணப்படுவதுடன், மழை காரணமாக பல வீடுகள் வெள்ளத்தால் பாதிப்படைந்த போதும் வவுனியா தெற்கு பிரதேச சபை செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்காது அசமந்த போக்குடன் செயற்பட்டு வருகின்றமையே இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு வழிவகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவி மட்டக்களப்புக்கு வழங்கப்படுதல் வேண்டுமாம்

## ஸ்ரீநேசனை முன்மொழிந்தார் அரியநேத்திரன்



இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவி மட்டக்களப்புக்கு வழங்கப்படவேண்டும்என்றகோரிக்கைகள் வலுத்துவருகின்றநிலையில்அப்பதவிவை அம்மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்ஞானமுத்துஸ்ரீநேசனுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற முன்மொழிவைச்செய்வதாகபா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் புதிய தலைமைத்தெரிவு மற்றும் தேசிய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பான ஏற்பாடுகள் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்டக்கிளைக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது, பொதுச்செயலாளர் பதவி மட்டக்களப்புக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்துள்ளதோடு அதிலேயேமேற்கண்டவாறுமுன்மொழிவும் செய்யப்பட்டுள்ளதாக அதில் பங்கேற்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த கூட்டம் மற்றும் முன்மொழிவு சம்பந்தமாக அரியநேத்திரன் தெரிவிக்கையில் -

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைமைக்கான தெரிவு நடைபெற்றதன் பின்னரேயே பொதுச்செயலாளர் பற்றிய தெரிவுகள் இடம்பெறுவதே கடந்த கால வரலாறாக உள்ளது.

அதேபோன்று, கட்சியின் தலைமை வடக்கு மாகாணத்திற்கு செல்கின்றபோது கிழக்கு மாகாணத்திற்கு பொதுச்செயலாளர் பதவி வழங்கப்படுவது சம்பிரதாயமாகும். அந்த வகையில், இம்முறை பொதுச்செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்படுவதாக இருந்தாலும், அது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது பலரது கருத்தாக உள்ளது.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அப்பதவி அளிக்கப்படுவதாக இருந்தால் இங்குள்ள சிரேஷ்ட உறுப்பினர்களிடையே முரண்பாடுகள் உள்ளன எனவும் பிரசாரம் செய்யப்படுகின்றது.

அதில் எனது பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைமைகளும் காணப்படுகின்றன. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அப்பதவி வழங்கப்படுவதாக இருந்தால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் பொருத்தமானவராக இருக்கின்றார். அவருடைய பெயரை நானே முன்மொழிகின்றேன். - என்றார்.

இதேவேளை 2019 ஆம் ஆண்டு கட்சியின் 16 ஆவது வருடாந்த மாநாட்டின் போது புதிய நிர்வாகத்தெரிவுக்கான முயற்சியில் அரியநேத்திரன் பொதுச் செயலாளர் பதவிக்கு முன்மொழியப்பட்டிருந்தார். எனினும் அம்மாநாட்டில் கட்சியின் பதவிநிலைகள் அவ்வாறே தொடரப்படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதால் குறித்த பதவிக்கான நியமனத்தைப் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# சட்டவிரோத பன்றி இறைச்சி கடையிலிருந்து ஜா – எல பிரதேசத்தில் 5 பெண்கள் கைது!

ஜா - எல, உடவெல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பெண்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டு நடத்தப்பட்டு வந்த சட்டவிரோத பன்றி இறைச்சி கடை ஒன்றிலிருந்து 5 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நீர்கொழும்பு, கொச்சிக்கடை, சீதுவை மற்றும் ஜா - எல ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 35 முதல் 50 வயதுக்குட்பட்டவர்களாவர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் வட்டிக்கு பணம் கொடுப்பவர் என்பதோடு ஏனைய இருவரும் பன்றி பண்ணை ஒன்றை நடத்தி வந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 30,900 ரூபா பணம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளநிலையில் இது தொடர்பானமேலதிகவிசாரணைகளை ஜா -எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# முட்டையின் விலையை அதிகரிக்கும் சதொச!

சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட இந்திய முட்டை ஒன்றின் விலை 43 ரூபாவாக அதிகரிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 35 ரூபாவுக்கு விற்க முடியாததால் சதொச விற்பனை நிலையங்கள் முட்டை விற்பனைக்கு கட்டுப்பாடு விதித்துள்ளன. அதன்படி சதொசவில் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில், சந்தையில் நாட்டு முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவி சிறிதரனுக்கு கிடைத்தமை மகிழ்ச்சி!

## சுமந்திரன் பெருந்தன்மைப் பேச்சு



ஜனநாயக தேர்தல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொறுப்பு வழங்கப்பட்டிருப்பது மிகுந்த மிகிழ்ச்சியளிப்பதாகவும், தலைவர் சிறீதரனுக்கு தனது முழுமையான ஆதரவை வழங்குவேன் என்றும் சக தலைமைப்பதவிப் போட்டியாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு முடிவுகள் வெளியான பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

தமிழரசுக் கட்சித் தலைவருக்கான தேர்தலிலே மிக ஆரோக்கியமாக, எமது கட்சி உட்கட்சி ஜனநாயகத்தை நாட்டுக்கும், சர்வதேசத்துக்கும் முன்மாதிரியாக நடத்திக் காட்டியிருக்கின்றது.

இதிலே வெற்றிபெற்ற நண்பன் சிறீதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எமது தலைவர் மாவை சேனாதிராசா வழிநடத்திய தமிழரசுக் கட்சிப் பொறுப்பு, இப்பொழுது சிறிதரனுக்கு வழங்கப்பட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியான விடயமாகும்.

இந்தப் பயணத்திலே நாம் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப்போம். இதை நாம் இருவரும் தேர்தல் காலத்திலும் தெளிவாக மக்களுக்குச் சொல்லியிருக்கின்றோம். அவ்வாறே தொடர்ந்து பயணிப்போம்.

ஆகவே,எனதுமுழுமையானஆதரவைதற்போது ஜனநாயக முறையில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைவர் சிறீதரனுக்கு முழுமையாக வழங்குவேன் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்த ஆண்டு புதிய அரசுக்கான மாற்றத்தை ஏற்படுத்த முடியும்!

## அநுர குமார நம்பிக்கை



தற்போதுள்ளஆட்சிமுறையைமாற்றவேண்டும்என்றமக்களினதும், தேசிய மக்கள் சக்தி கட்சியினதும் கொள்கை இன்று ஒன்றாக மாறியுள்ளதால், இந்த ஆண்டில் புதிய அரசாங்கத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமாரதிசாநாயக்ககண்டியில் தெரிவித்துள்ளார்.

அனைத்து வகையிலும் மூழ்கிக்கொண்டிருக்கும் நாட்டை காப்பாற்ற புதிய மறுமலர்ச்சி யுகம் காலத்தின் கட்டாயத் தேவை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரி மகாநாயக்கரின் ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

தற்போதுள்ள ஆட்சி முறையை மாற்றுவது வெறும் அரசியல் வேலைத்திட்டம் அல்ல, தேசிய செயற்பாடு. புதிய மாற்றத்துக்காக மக்கள் தற்போது முன்வருகின்றனர்.

பொருளாதாரரீதியிலும் அனைத்து துறைகளிலும் நாட்டின் வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் இன்று இருந்த இடத்தில் இருந்து ஒரு படி முன்னேறி நாட்டை கட்டியெழுப்பியுள்ளதாக கூறப்படுவது நகைப்புக்குரிய விடயமாகும்.

ஆகவே, இந்தப் பேரினவாதக் கும்பலிடம் இருந்து நாட்டை விடுவித்து, நாட்டைப் புதிய பாதைக்கு வழிநடத்த வேண்டும். இதுவே தேசிய மக்கள் சக்தியின் இலக்காகும்.

மக்கள் வாக்குகள் தேசிய மக்கள் சக்தியிடம் இருப்பதை அறிந்த அரசாங்கம் தற்போது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதா அல்லது பொதுத் தேர்தலை நடத்துவதா என்ற குழப்பத்தில் உள்ளது. எந்தத் தேர்தலை முதலில் நடத்தினாலும் அதனை எதிர்கொள்ள தேசிய மக்கள் சக்தி கட்சி தயாராக உள்ளது.

நாட்டில் மரக்கறிகளின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. தேவைக்கு ஏற்றவாறு விநியோகம் இல்லாதபோது விலை அதிகரிப்பது சந்தைக் கோட்பாடு. இந்த சூழலில் இதனை அரசாங்கம் தலையிட்டு முகாமைத்துவம் செய்ய வேண்டும். - என்றார். (05)

# மத்திய மாகாணப் பாடசாலைகளில் இடம்பெறும் விழாக்களை வரையறுத்து சுற்றுநிருபம் வெளியீடு

மத்திய மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளில் இடம்பெற்றுவரும் விழாக்களில் ஏழு விழாக்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் என மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் மேனகா ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள விசேட சுற்று நிருபத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் கூறுகையில் -

மத்திய மாகாண சபைக்கு உரித்தான பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகளில் பல்வேறு விழாக்களை ஏற்பாடு செய்து, சில பாடசாலைகள் பெற்றோர்களிடமிருந்து பணம் அறவிடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனால் மத்திய மாகாணத்தில் உள்ளஅனைத்துபாடசாலைகளும்இடம்பெற்றுவரும் நிகழ்வுகளில் ஏழு நிகழ்வுகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த சுற்று நிருபத்துக்கு அமைய முதலாவது தவணையில் 3 விழாக்களுக்கும் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளில் 4 விழாக்களுக்கும் அனுமதி வழங்கப்படுவதுடன் இதற்கு மேலதிகமாக ஏதாவது ஒரு விழா நடத்துவதாக இருந்தால் அது தொடர்பாக மாகாண கல்வி பணிப்பாளரிடம் அனுமதி பெறவேண்டும். முதலாம் தவணையில் புதிய பிள்ளைகளை அனுமதிக்கும் விழா, சுதந்திர தின விழா மற்றும் இல்ல விளையாட்டு விழா நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளின்போது கல்விச் சுற்றுலா, கலைவிழாக்கள், வர்ண நிகழ்வுகள் மற்றும் வருடாந்த பரிசளிப்பு விழா ஆகியவற்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் இசைக் கச்சேரி, ஆசிரிய கௌரவிப்பு உள்ளிட்ட பல்வேறு விழா நிகழ்வுகளை ஏற்பாடு செய்து அதிபர்கள் உள்ளிட்ட பல்வேறு குழுக்களினால் வரையறை இன்றி பெற்றோர்களிடமிருந்து பணம் அறவிடுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த சுற்று நிருபம் விடுக்கப்பட்டுள்ளது. - என்றார். (05)

# மேற்கத்தேய முறைகளின் கீழ் செல்லாமல் மக்களின் பசியைப் போக்கக்கூடிய தலைமைத்துவம் வேண்டும்

## பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்து

ஒரு நிகழ்ச்சி நிரலிலிருந்து வெளியேறி பிரிதொரு நிகழ்ச்சி நிரலுக்குள் சிறை பிடிக்கப்படுவதை தேர்தலின் மூலம் நாம் எதிர்பார்க்கவில்லை. இந்த ஆண்டு தேர்தலுக்குரிய ஆண்டாகக் குறிப்பிடப்படுகிறது. எனவே மேற்கத்தேய முறைகளின் கீழ் செல்லாமல் மக்களின் பசியைப் போக்கக்கூடிய தலைமைத்துவம் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

முகத்துவாரம் புனித ஜோன் தேவாலயத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற விசேட ஆராதனையின் போதே பேராயர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இலங்கைக்குள் காணப்படும் பிரச்சினைகளிலிருந்து எம்மால் ஒதுங்கியிருக்க முடியாது. மத தலைமைத்துவம் என்பது வழிபாட்டுத் தலங்களுக்குள் சென்று போதனை செய்துகொண்டிருப்பது மாத்திரமல்ல. மக்களுக்கு துயரம் ஏற்பட்டால், அவர்களுக்காக வீதிக்கு இறங்கி குரல் கொடுப்பதே உண்மையான தலைமைத்துவமாகும்.

இந்த ஆண்டு தேர்தலுக்கான ஆண்டாகும் என அனைவராலும் கூறப்படுகிறது. ஒரு நிகழ்ச்சி நிரலிலிருந்து வெளியேறி பிரிதொரு நிகழ்ச்சி நிரலுக்குள் சிறைபிடிக்கப்படுவதை தேர்தலின் மூலம் நாம் எதிர்பார்க்கவில்லை. நாட்டுக்காக அர்ப்பணிப்புடன்செயற்படுவதேஎமதுதேவையாகும். சில நியாயங்களுக்கு அடிமையாகி, வெளிநாடுகளில் நிராகரிக்கப்பட்டுள்ள நியாயங்களின் பின்னால் செல்வது பிரயோசனமற்றது.

அவற்றின் பின்னால் சென்று நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. இலங்கையில் காணப்படும் சுயநலவாத போக்கு முன்னேற்றத்துக்கு தடையாக உள்ளது. மேற்கத்தேய கலாசாரம் எமது நாட்டுக்கு பொருந்தாது. நாட்டிலுள்ள மக்களின் பசியைப் போக்கும் அரசியலே இலங்கைக்கு பொருத்தமானது. அவ்வாறு செயற்படுவதே தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். - என்றார். (05)

# ஆன்மிகத்துக்குள் நுழைந்தார் பூஜா!

இந்திய - இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த தேசிய விருது பெற்ற பிரபல நடிகையான பூஜா உமாசங்கர், தனது கலைவாழ்க்கையைவிட்டுவிட்டு ஆன்மீக வாழ்வில் நுழையத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது தனிப்பட்ட சவால்கள் மற்றும் ஏமாற்றங்களால் மனமுடைந்த பூஜா, இலங்கையை விட்டு வெளியேறி சமீபத்தில் இந்தியா சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நாள்களில் இலங்கையில் திரையிடப்பட்டு வரும் தென்னிந்திய திரைப்பட இயக்குநர் சரோன்முகம் சிங்கள் திரைப்படம் அவரது கடைசி திரைப்படமாக கருதப்படுகிறது.

பூஜா இலங்கைக்கு திரும்புவதில்லை என்ற உறுதியான முடிவை எடுத்து தனது நடிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க முடிவு செய்துள்ளார்.

இரண்டுதிருமணங்களும்தோல்வியடைந்ததால் 



விரக்தியடைந்த அவர், சில காலமாக அதிருப்தி உணர்வோடு பணியாற்றி வந்தார் எனவும், அதன் விளைவாக ஆன்மீக வாழ்க்கைக்கு திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (05)



# மலையகத்தில் தேசிய பொங்கல் பெருவிழா!

மலையகத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தேசிய பொங்கல் விழா இடம்பெற்றிருந்தது.

அதன்படி நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஹற்றன் - டன்பார்க் மைதானத்தில் குறித்த விழா நடைபெற்றது.

இதில் 1008 பொங்கல் பானை வைக்கப்பட்டு, தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டுவிழுமியங்களுடன் இந்தப் பொங்கல் விழா வெகு விமரிசையாகக் கொண்டப்பட்டிருந்தது.


அத்துடன் கோலப்போட்டி, தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றான சிலம்பாட்டம் உள்ளிட்ட பல பாரம்பரியபோட்டிகளும்இடம்பெற்றன.

மேலும் இந்த தேசிய பொங்கல் விழாவில்பிரதமர்தினேஷ்குணவர்தன பிரதமஅதிதியாகப்பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிழக்கு ஆளுநருக்கு வைரமுத்து வாழ்த்து!

கிழக்குமாகாணஆளுநர்செந்தில் தொண்டமானின் செயற்பாட்டுக்கு கவிஞர் வைரமுத்து வாழ்த்து தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர்செந்தில்தொண்டமான்அன்று மகாகவி பாரதியார் சொன்னதை இன்றுநடைமுறைப்படுத்திவருகிறார் என கவிஞர் வைரமுத்து வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மேலும்கவிஞர்வைரமுத்து,தமிழ் பாரம்பரியத்தை மீட்டெடுத்த ஆளுநர் செந்தில் தொண்டமானை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதாக தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார். (05)



# ஜோர்தானில் இரு தொழிற்சாலைகளுக்குப் பூட்டு: பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க திட்டம்

ஜோர்தானில் 2 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளமையால் அவதியுறும் இலங்கை தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவது தொடர்பில் ஜோர்தானிய தொழில் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜோர்தான் இலங்கைத் தூதரக அதிகாரிகள் அண்மையில் அந்நாட்டு தொழிலாளர் அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடியதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஜோர்டான் தொழிலாளர் அமைச்சகத்தின் அதிகாரிகள் விசாவைக் காலம் கடந்து தங்கியிருக்கும் தொழிலாளர்களை அபராதம் ஏதுமின்றி அங்கு அனுப்ப ஒப்புக்கொண்டுள்ளனர்.

புறப்படும் திகதிக்கான விமான டிக்கெட்டுகள் மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்புகளை வழங்க வாய்மொழி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும், நிலுவைத் தொகை மற்றும் கொடுப்பனவுகளைவழங்குவதற்கும்,கடந்த மாதம் முதலாம் திகதி சமூக பாதுகாப்பு பங்களிப்புகளை வழங்குவதற்கும், தொழிலாளர் மற்றும் தொழில்சார் உரிமைகள் பற்றிய நிபுணத்துவ அறிவு கொண்ட சட்டத்தரணிகளின் உதவியைப் பெறுவதில் ஜோர்டானிய தொழிலாளர் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த இலங்கை ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, வேறு பணியிடங்களுக்குச் செல்ல விரும்புபவர்களை சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மத்தியில் வழிநடத்தி, நாட்டிற்கு வர விரும்பும் பணியாளர்களை விரைவில் அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (05)

# உள்ளாடையில் வெடிபொருள்களை மறைத்து கொண்டு பஸ்ஸில் பயணித்த பெண் கைது!

வெடிபொருள்களை உள்ளாடையில் மறைத்து வைத்துக்கொண்டு பஸ்ஸில் பயணித்த பெண் ஒருவர் கொட்டவெஹர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டவெஹர பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் பொலிஸ் மோப்பநாய்கள்மூலம்நீண்டதூர பயண வாகனங்களை சோதனை செய்யும் நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பஸ் ஒன்றில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் பஸ்ஸில் இருந்த பெண்ணொருவர் உள்ளாடையில் மறைத்து வைத்திருந்த வெடிபொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடத்தில் இருந்து 2 டெட்டனேட்டர்கள், 165 கிராம் கறுப்பு நிற வெடிமருந்து, 605 கிராம் அமோனியம் மற்றும் 10 அடி கம்பிச்சுருள் உள்ளிட்ட பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் கற்குவாரியில் வேலை செய்துவருவதாகவும் தனது வீட்டின் பின் புறத்தில் உள்ள கற் பாறைகளை உடைப்பதற்காக இந்த வெடி பொருள்களை எடுத்துச் செல்வதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதான பெண்ணின் வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவதால் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக கொட்டவெஹர பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.01.2024இல் வெளியிடப்பெற்றது.